19	பொலீஸ் போக்குவரத்து பிரிவு	களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	
20	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையில் தரம் 1 இன் அலுவலர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (7 ஆவது குழு)	30
21	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையில் தரம் 1 இன் அலுவலர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (8 ஆவது குழு)	30

22	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையில் தரம் 1 இன் அலுவலர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (9 ஆவது குழு)	30
23	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையில் தரம் 1 இன் அலுவலர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (10 ஆவது குழு)	30
24	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையில் தரம் 1 இன் அலுவலர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (11 ஆவது குழு)	30
25	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையில் தரம் 1 இன் அலுவலர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (12 ஆவது குழு)	30
26	பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு	கொள்முதல் செயற்பாடு மற்றும் பணத்தொகைக்கு சமமான பெறுமதி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	20
27	உள்நாட்டு இறைவரி திணைக்களம்	இலங்கை உள்நாட்டு இறைவரி சேவையில் தரம் 1 இன் அலுவலர்களுக்கான ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (நிகழ்நிலை முறையின் கீழ் நடாத்தப்பட்டது.)	30
28	இலங்கை சுங்கம்	கற்பித்தல் முறை தொடர்பாக பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	29
29	இலங்கை கடற்படை	(வழங்கல் சங்கிலி) அலுவலர்களுக்கான அரசு நிதி மற்றும் கொள்வனவு/பெறுகை முகாமைத்துவம்	19
30	இலங்கை கணினி அவசர பதில் வழங்கும் பேரவை (Sri Lanka CERT)	சைபர் பாதுகாப்பு மேம்படுத்துவது தொடர்பாக அரசாங்க அலுவலர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்	435
31	புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	தொழில்சார் ஆங்கில மொழி கற்கைநெறி	20

08

தாபன அபிவிருத்திப் பிரிவு

32	தொல்லியல் திணைக்களம்	நிறைவேற்று தரத்தின் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	25
	மொத்தம்		**1,267**

தாபன அபிவிருத்தி என்பது விரிவான மற்றும் மூலோபாய செயற்பாடுகளாவதுடன், அதன்மூலம் மூலோபாயம், கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளை தயாரித்தல், மேம்படுத்தல் மற்றும் பலப்படுத்துவதன் ஊடாக மாற்றங்களையும் உயர் வினைத்திறனையும் எட்டுவதற்காக, நிறுவனங்களுக்கு தமது ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுகின்றது.

இப் பிரிவின் பிரதான பணிகள் பின்வருமாறாகும்.

- இலக்காக கொள்ளப்பட்ட செயற்பாடுகளை திட்டமிடல்
- அரச துறையின் நிறுவனங்கள் மற்றும் அரச துறைக்குரிய தொழில்முயற்சியாளர்களின் சேவையினை வழங்கும் பயன் மற்றும் வினைத்திறனை விருத்தி செய்வதற்காக தாபன அபிவிருத்தி சேவைகளை வழங்குதல்
- முகாமைத்துவ அலோசனை செயற்பாடுகள் மற்றும் அச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக மூலோபாயங்களை தயாரித்தல்
- ஆற்றல் அபிவிருத்தி தொடர்பில் நிறுவனங்களுடன் சர்வதேச ரீதியாக ஒத்துழைப்பினை கட்டியெழுப்புதல்.
- உள்ளக பதவியணியின் பொருட்டு ஆற்றல் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்தல்.

2024 ஆம் ஆண்டில் நிறுவன அபிவிருத்தி பிரிவால் பின்வரும் பணிகள் வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டன.

01. மூலோபாய திட்டமிடல் செயல்முறை புதுப்பிக்கப்பட்டு, 2023-2027 காலப்பகுதிக்கான மூலோபாய திட்டம் தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

02. சர்வதேச ஒத்துழைப்பு - இந்தியாவின் தேசிய நல்லாட்சிக்கான நிலையத்தின் (National Centre

for Good Governance) தூதுக்குழுவினர், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கல்விசார் அலுவலர்களை வலுப்படுத்துவதற்கும், சிவில் சேவையாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு 2024 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் இந்த நிறுவகத்திற்கு விஜயம் செய்தனர்.

03. அறிவின் எல்லைகளை கடந்து செல்லுதல் (Beyond the Horizon) எனப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது அமர்வு, நாடளாவிய சேவைகளின் விசேட தரத்தின் அலுவலர்களுக்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திலும் நுவரெலியா பொரஸ்ட் கல்லூரியிலும் 2024 மார்ச் மாதம் நடைபெற்றது.

04. சுற்றுச்சூழல் உணர்திறன் மிக்க இடங்களை வலுப்படுத்தல் - இலங்கையின் சுற்றாடல் கூர்உணர்வு இடங்கள் தொடர்பான கொள்கை

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தால் பிரதேச நிர்வாகிகளுக்கும், மாகாண சபை மற்றும் மாவட்ட மட்டத்திலான அரசாங்க அலுவலர்களுக்காக இலங்கையின் சுற்றுச்சூழல் கூர்உணர்திறன் மிக்க இடங்கள் தொடர்பான கொள்கையை அறிமுகப்படுத்தும் நோக்கிலான செயலமர்வு 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் நடாத்தப்பட்டது.

05. புதிய செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை - இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கல்விசார் பதவியணியால் புதிய செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது சேவையாற்றும் மணித்தியாலங்களுக்கான வழிகாட்டல்களுடன், ஆலோசகர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளையும் உள்ளடக்கியுள்ளது.

06. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலையை ஆரோக்கியமான சிற்றுண்டிச்சாலையாக மாற்றும் திட்டம் (Healthy Café Project) முன்னெடுக்கப்பட்டது. பணியிடங்களில் ஆரோக்கியமான சிற்றுண்டிச்சாலைகளைப் பேணிவரும் திட்டத்தின் கீழ், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியுதவியுடன், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் சிற்றுண்டிச்சாலை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

முகாமைத்துவ ஆலோசனை (MC) செயல்முறை

முகாமைத்துவ ஆலோசனைச் செயல்முறை மற்றும் முகாமைத்துவ ஆலோசனை வழிகாட்டல்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளின் முன்னேற்றம்

- முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதற்காகப் பதிவுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை – 24
- தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் - 17

	அலோசனைப் பணி	நிறுவனம்
1	நிறுவன வணிகம் மற்றும் கூட்டுத் திட்டத்தை உருவாக்குதல்	இலங்கை கண் வங்கி
2	பதவியணி மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம்	இலஞ்சம் அல்லது சார்த்துதல்களை புலனாய்வு ஆணைக்குழு
3	மேர்சன்ட் பாங் ஒப் ஸ்ரீ லங்கா அண்ட் பைனான்ஸ் பீஎல்சீ பொருட்டு பிரதான வங்கியிடல் விண்ணப்பங்கள் கட்டமைப்பை மதிப்பிடுவதற்காக கொள்முதல் ஆலோசகரை கட்டணம் செலுத்தும் அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல்	மேர்சன்ட் பாங் ஒப் ஸ்ரீ லங்கா அண்ட் பைனான்ஸ் பீஎல்சீ வியாபார வங்கி
4	வழிகாட்டல் திட்டங்கள் மற்றும் போனஸ் கொடுப்பனவு முறைகளை தயாரித்தல்	நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை
5	இணைந்த திட்டம் தயாரித்தல்	தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்
6	நேரடி வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்துவதற்காக தொழில்பாட்டு திட்டங்களை தயாரித்தல்	முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு
7	பயிற்சி மோடியுல் தயார் செய்தல்	வட மத்திய மாகாண சபை
8	மூலோபாய திட்டம் தயாரித்தல்	கித்துல் அபிவிருத்தி சபை
9	ஐந்தாண்டு இணைந்த திட்டம் தயாரித்தல்	ஜீஸ்எம்பீ டெக்னிகல் சர்விஸ் (பிரைவட்) லிமிடெட்
10	நிறுவன பதவியணி தொகுதிபடுத்தல் குறியீடுகளை இற்றைப்படுத்தல்	தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்
11	இணைந்த திட்டம் தயாரித்தல்	தேசிய பொலிஸ் அகடமி
12	பொறிமுறை மற்றும் கடமைப் பொறுப்புகள் தொடர்பான வேலை கற்கை	கொழும்பு மாநகர சபை
13	செயலாற்றுகை மதிப்பீடு முறைமை தொடர்பாக வேலை கற்கை மற்றும் அதனை தயாரித்தல்	தொழில் திணைக்களம்
14	மூலோபாய திட்டத்தை ஏற்பாடு செய்தல்	சிரம வாசனா நிதியம்
15	இற்றைப்படுத்திய நிருவாக மற்றும் ஒழுக்காற்று திட்டம்	ஊழியர் சேமலாப நிதியச் சபை
16	10 ஆண்டுகளிலான இணைந்த திட்டம் தயாரிப்பதற்காக சேவை வழங்குதல்	மதிப்பீட்டு திணைக்களம்

17 செயலாற்றுகை மதிப்பீடு முறைமை தொடர்பாக தொழில் திணைக்களம் வேலை கற்கை மற்றும் அதனை தயாரித்தல்

வேலைகள் முடிவுறுத்திய முகாமைத்துவ ஆலோசனை பணிகள் – 03

1.	ஆட்சேர்ப்பு பரீட்சைக்கான முகாமைத்துவ ஆலோசனை	அரசாங்கத்தின் மதிப்பீட்டு திணைக்களம்
2.	பிரதான செயலாற்றுகை சுட்டிகள் (KPI) இற்கான செயலயாற்றுகை	இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம்

09 பட்டப் பின்படிப்பு கற்கை நிறுவகம்

3. நெறிமுறை கோவை தொகுத்தல் மற்றும் அதனை வலுவூட்டல்	தேசிய பொலிஸ் அகடமி

08. உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஒரு முறைமை தாபிக்கப்பட்டுள்ளதுடன், நிறுவன உற்பத்தித்திறன் வட்டங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

09. தரக் கட்டுப்பாட்டுக்கான நிலையம் - தரக் கட்டுப்பாட்டுக்காக நிலையம் தாபிப்பதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1985 இலக்கம் 07 ஐ கொண்ட சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 ஆம் வாசகத்தின் கீழ் விதிக்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2003 ஆம் ஆண்டில், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு பட்டப்பின் பட்டப்படிப்பு பட்டம் வழங்கும் அந்தஸ்த்து வழங்கப்பட்டது. இதற்கு மைய பட்டப் பின்படிப்பு கற்கை நிறுவனம் தாபிக்கப்பட்டதுடன் பின்னர் இந்த நிறுவகம் தேசிய, வலய மற்றும் சர்வதேச மட்டங்களில் அரச துறையின் தொழில் வல்லுநர்களுடன் தொடர்ச்சியாக செயற்பாடுகளை முன்னெடுத்தது. அமைச்சு செயலாளர்கள், நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் என அனைவரும் தங்கள் முகாமையாளர்களிடமிருந்து ஒத்த பெறுமதி சேர்க்கப்பட்ட பங்களிப்பை அதிகமாக எதிர்பார்க்கும், விரைவாக மாறிவரும் மற்றும் சவாலான தற்போதைய அரச முகாமைத்துவ சூழலில், பொது முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரத்தியேகமான பொது முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்புத் திட்டம், பாடத்திட்டத்தைக் கற்கும் நபர்களுக்கு பட்டப் படிப்பைப் பெறுவதற்கான வாய்ப்பையும், பல்வேறு முகாமைத்துவ மட்டங்களில் நம்பிக்கையுடன் தங்கள் பணிகளைச் செய்வதற்குத் தேவையான திறன்களையும் வழங்குகிறது.

பட்டப்பின் படிப்பு கற்கை நிறுவகத்தில், அரச முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை இந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் முக்கியமான நடைமுறை பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றாகும். ஆகையால் பாடநெறிக்கான பங்கேற்பாளர்களை தெரிவு செய்யும் செயற்பாடுகள், நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் பாடநெறியினை நடாத்திச் செல்லும் முறைகள் என்பன, வேறு இவ்வாறான முறைகள் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து மாற்றமடைகின்றது.

நிறுவன மீளாய்வு - இலங்கைத் தகைமை வழிகாட்டலுக்கான இணக்கம் (SLQF)

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவொன்று, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தொடர்பான நிறுவன மீளாய்வை 2024 திசெம்பர் 18 ஆம் திகதி மேற்கொண்டது. இந்த நிபுணர் குழுவுக்கு பேராசிரியர் தீப்தி பண்டார தலைமை தாங்கினார். பேராசிரியர் இந்திரா நாணயக்கார, கலாநிதி ரங்க ரோட்ரிகோ, திரு. கே.கே.கே. தர்மதிலக்க மற்றும் திரு. ரி. தர்மராஜா ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர். இந்த நிபுணர் குழு நிறுவனத்தின் கல்விசார் பதவியணியுடனும் முகாமைத்துவ பதவியணியுடனும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன், பட்டதாரிகளுடனும் தற்போதைய மாணவர்களுடனும் தனித்தனியான சந்திப்புக்களையும் நடாத்தியது. குறித்த காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படும் இந்த நிறுவன மீளாய்வின் முடிவுகள் 2025 பெப்ருவரி மாதத்தில் வெளியிடப்படும்

சீன மக்கள் குடியரசின் ஹியாசோங் பல்கலைக்கழக (Huazhong University) தூதுக்குழுவின் விஜயம்

இரு நிறுவனங்களுக்கிடையேயான கல்விசார் உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன், சீன மக்கள் குடியரசின் ஹியாசோங் பல்கலைக்கழகத்தின் (Huazhong University) தூதுக்குழுவொன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு விஜயம் செய்தது. ஹியாசோங் பல்கலைக்கழகத்தின் சர்வதேச கல்வி நிறுவனத்தின் பீடாதிபதி, பேராசிரியர் ஸோஹ்யு லிப்பிங் (Professor Zohyu Liping) இந்த தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கினார்.

இந்தத் தூதுக்குழு, SLIDA சிரேஷ்ட அதிகாரிகளுடன் உயர் கல்வி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சியுடன் தொடர்பான ஒத்துழைப்பு வாய்ப்புகளைக் கண்டறிதல், அறிவு மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளைப் பரிமாறிக்கொள்வதற்கு உதவக்கூடிய பங்களிப்புகளை மேம்படுத்துதல், மற்றும் SLIDA இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்துடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புதுப்பித்தல் போன்ற விடயங்கள் குறித்து பயனுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபட்டது.

மீள நடாத்தப்படும் பரீட்சை அமர்வு

பட்டப்பின்படிப்பு கற்கை நிறுவனம், பரீட்சைப் பிரிவின் ஒத்துழைப்புடன், மீள நடாத்தப்படும் பரீட்சைகளுக்கான விசேட அமர்வு ஒன்றை நடாத்தியது. இதன்படி, 15 பாடங்களுக்கான பரீட்சைகள் மீள நடாத்தப்பட்டதுடன், 61 மாணவர்கள் இதில் பங்குபற்றினர். கொவிட்-19 பெருந்தொற்று மற்றும் பொருளாதாரச் சிரமங்கள் காரணமாக ஏற்பட்ட தாமதங்களால், கல்விசார் பணிகளில் பின்தங்கியிருந்த நிலையை நிறைவு செய்வதற்கு இந்த மீள நடாத்தப்பட்ட பரீட்சை அமர்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட தடைகள் காரணமாக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தங்கள் கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாத மாணவர்களுக்கு இந்த பரீட்சைகள் ஒரு வாய்ப்பை வழங்கின.

ஓராண்டு பொது முகாமைத்துவப் பட்டப்பின் படிப்புத் திட்டம்

நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துவதற்கும், போட்டித்தன்மை வாய்ந்த கல்விச் சந்தையில் மாறிவரும் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும், பட்டப்பின்படிப்பு கற்கை நிறுவனம், ஓராண்டு பொது முகாமைத்துவப் பட்டப்பின் படிப்புத் திட்டத்தை (SLQF 9) அடுத்த சேர்க்கைக்கு அறிமுகப்படுத்த ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்தத் திட்டம் பல்வேறு தொழில்சார் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப கற்றல் வழிகளையும், புதிய கற்பித்தல்

10 பரீட்சைப் பிரிவு

முறைகளையும் வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இரண்டாண்டு பொது முகாமைத்துவப் பட்டப்பின் படிப்புத் திட்டம்

2021/2023 குழுக்களால் தங்கள் பாடத்திட்டப் பணிகளை நிறைவு செய்துள்ளனர். புதிய தொகுதியைச் சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பரீட்சைப் பிரிவு, 2024 ஆம் ஆண்டில் 55 பரீட்சைகளை நடாத்தியுள்ளது. இதில் வெளி நிறுவனங்களுக்காக நடத்தப்பட்ட 45 பரீட்சைகளும், இந்த நிறுவனத்தின் உள்ளக திட்டங்களுக்கான 10 பரீட்சைகளும் அடங்கும்.

வெளி நிறுவனங்களுக்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளில் பதவி நியமனங்களுக்கான பரீட்சைகள், வினைத்திறன் தடை தாண்டும் பரீட்சைகள் மற்றும் பதவி உயர்வு தொடர்பான பரீட்சைகள் ஆகியவை அடங்கும்.

10.1 வெளியக பரீட்சைகள் - 2024

தொடர் இல	பரீட்சையின் பெயர்	நிறுவனம்	விண்ணப்பத்தாரிகளின் எண்ணிக்கை
1	இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரத்தின், I ஆம் வகுப்பு அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு	5
2	இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டும் பரீட்சை - 2020 (I)		146
3	இலங்கை கோளரங்கத்தின் விரிவுரையாளர் பதவிக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	இலங்கை கோளரங்கம்	1
4	சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	மக்கள் பாதுகாப்பு அமைச்சு	1
5	II ஆம் தரத்தின் விரிவுரையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	தேசிய பயிலுநர் மற்றும் தொழில்துறை பயிற்சிக்கான அதிகார சபை	6

6	சட்ட உதவியாளர் பதவியில் முதலாவது வினைத்திறன் தடை தாண்டும் பரீட்சை	கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்	1
7	II ஆம் தரத்தின் அமுலாக்க அதிகாரமளிக்கும் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம்	121
8	சட்ட அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	நீர்ப்பாசன திணைக்களம்	1
9	அளவையிடல் பரிசோதனை அலுவலர்கள் (திணைக்களத்துடனான) முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அளவையிடல் அலகுகள், நியம மற்றும் சேவைகள் திணைக்களம்	13
10	முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம் அல்லாத) இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	நிதி அமைச்சு	2
11	திணைக்களத்துடனான நிறைவேற்று சேவைக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்	1
12	சட்ட அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	வனவியல் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு	1
13	கைத்தொழில் பரிசோதகர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டும் பரீட்சை	கைத்தொழில் அமைச்சு	1
14	முகாமைத்துவ உதவியாளர் அதிஉயர்தர சேவை தொகுதியின் மாவட்ட பரிசோதகர் (போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்) பதவிக்கான ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை	இலங்கை புகையிரத திணைக்களம்	62
15	முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவை தொகுதி 2 (வரவேற்பலுவலர்) பதவியில் முதலாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டும் பரீட்சை	அரசாங்க சேவை ஆணைக்குழு	1
16	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) 03 ஆவது சேவை தொகுதியின் தொழில்நுட்ப உதவியாளர் III சேவை தொகுதியின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டும் பரீட்சை	கட்டிடங்கள் திணைக்களம்	8
17	தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைத் தாண்டும் பரீட்சை	கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்	2

18	நிறைவேற்று சேவை அலுவலர் தொகுதியில் வெடிமருந்து கட்டுப்பாட்டாளர் பதவியில் தரம் 1 இல் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டும் பரீட்சை	பாதுகாப்பு அமைச்சு	1
19	இலங்கை வெளிநாட்டு தூதரகங்களின் முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை	வெளிநாட்டலுவல்கள் அமைச்சு	22
20	கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை- எம்எம் 1-1 (உதவி பணிப்பாளர்) – தரம் II இற்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	நிருமாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை	8
21	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) (எம்ஏ 1-2) III தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை	17
22	அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	53,527
23	அபிவிருத்தி அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை		
24	அபிவிருத்தி அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை		
25	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப தொகுதி 3) அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைட் தாண்டும் பரீட்சை	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களம்	4
26	தொழில்நுட்ப ஒப்படைப்பு அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை	தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்	31
27	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப தொகுதி 3) அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	சட்ட அலுவல்கள் திணைக்களம்	1
28	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப தொகுதி 3) அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	கட்டுமான தொழில் அபிவிருத்தி அதிகார சபை	26
29	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப தொகுதி 3) அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டும் பரீட்சை	குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம்	5
30	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப தொகுதி 3) அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	வணிக திணைக்களம்	7

31	இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	396
32	பதிவாளர் சேவையில் III தரம் II வகுப்பின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	பதிவாளர் நாயகத் திணைக்களம்	444
33	நிர்வாக அலுவலர்கள், மனித வள அலுவலர்கள் மற்றும் நிதி அலுவலர்கள் பதவிக்கான ஆட்சேர்ப்புப் போட்டி	மத்திய சுற்றாடல் அதிகார சபை	9
34	முகாமைத்துவ உதவியாளர் (கடற்றொழில் வளங்கள்) II தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்	1
35	சட்ட அலுவலர் பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	சுற்றுலா அமைச்சு	1
36	ஆராய்ச்சி அலுவலர் பதவிக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	தெங்கு பயிர்ச் செய்கைச் சபை	51
37	மீன்பிடி பரிசோதகர் பதவிக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	கடற்றொழில் திணைக்களம்	1
38	உதவிப் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு பரீட்சை (மட்டுப்படுத்திய)	தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்	31
39	உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்துடனான) பதவியில் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அரசாங்க தகவல் திணைக்களம்	2
40	முகாமைத்துவ சேவை அலுவலர் சேவையின் வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	32
41	தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	52
42	நாடளாவிய சேவைகளுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	794
43	III தரத்தின் நட்டஈட்டு (Compensation) அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	நட்டஈடுகளுக்கான அலுவலகம்	2
44	நிறைவேற்று அலுவலர் சேவை தொகுதிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	தேசிய புலமைச் சொத்து அலுவலகம்	1
45	முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு பரீட்சை	சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை	111

10.2 உள்ளக பரீட்சைகள் - 2024

தொடர் இலக்கம்	நடாத்தப்பட்ட பரீட்சைகள்	விண்ணப்ப-த்தாரிகளின் எண்ணிக்கை
01	அலுவலக முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா (2020/21) மீண்டும் நடாத்தப்பட்ட பரீட்சை	14
02	தொழில்முறை ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி - 2022 - II ஆவது மட்டம் – முதலாவது குழுவிற்கான ஆட்சேர்ப்பு	24
03	அலுவலக முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா (2021/2022) II ஆவது கல்வி அமர்வின் பரீட்சை	36
04	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) அலுவலர்களு-க்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டும் பரீட்சை	07
05	தொழில்முறை ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி- மீண்டும் நடாத்தப்பட்ட பரீட்சை	20
06	தொழில்முறை ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி - 2022 I ஆவது மட்டம் - இரண்டாவது குழுவிற்கான ஆட்சேரப்பு	41
07	கணக்காய்வு தொடர்பான டிப்ளோமா - மீண்டும் நடாத்தப்பட்ட பரீட்சை	07
08	அரச கொள்முதல் மற்றும் ஒப்பந்த நிருவாகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா - 2022/23	
09	அரச கொள்முதல் மற்றும் ஒப்பந்த நிருவாகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா - 2022/23 III ஆவது கல்வி அமர்வு பரீட்சை	71
10	அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி (2019/2021) மற்றும் (2020/2022) IV ஆவது கல்வி அமர்வு பரீட்சை	90
11	அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி (2021/2023) I ஆவது கல்வி அமர்வு பரீட்சை	40
12	அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி (2021/2023) II ஆவது கல்வி அமர்வு பரீட்சை	30
13	அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி (2019/2021) மற்றும் (2020/2022) V ஆவது கல்வி அமர்வு பரீட்சை	90
14	அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி (2021/2023) III ஆவது கல்வி அமர்வு பரீட்சை	28
15	அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறி (2019/2021) மற்றும் (2020/2022) VI ஆவது கல்வி அமர்வு பரீட்சை	77
16	தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) - எம்ஏ 2-1 அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	01
17	தொழில்நுட்ப உதவியாளர் (கணினி மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்) - எம்ஏ 2-1 அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	01
18	நிகழ்ச்சித்திட்ட அலுவலர் - ஜேஎம் 1-1 பதவியின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	04
19	முகாமைத்துவ உதவியாளார் (தொழில்நுட்பமல்லாத) - எம்ஏ 1-1 அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டும் பரீட்சை	11

11

மொழி கற்கை நிலையம்

2024 ஆம் ஆண்டின் முடிவில், மொழி கற்கை நிலையத்தால் இணைப்பு மொழிக்கு (ஆங்கிலம்) ஏற்படையதாக 03 நிகழ்ச்சித்திட்டங்களை அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது.

01. தொழில்முறை ஆங்கில டிப்ளோமா (Diploma in Professional English)

- 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது ஆட்சேர்ப்பின் பொருட்டு பதிவு செய்யப்பட்ட 43 அலுவலர்களுக்கிடையில் 33 பேர் இறுதி கட்ட தேர்வில் பங்குபற்றினார்கள்.

- 2023 ஆம் ஆண்டின் முதல் சேர்க்கை 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெற்றது. 115 அலுவலர்கள் பதிவுசெய்தனர். இவர்களில் 95 பேர் முதற்கட்ட தேர்வுக்குத் தகுதி பெற்றனர். தற்போது, முதற்கட்ட வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன, வார இறுதி (சனிக்கிழமை) வகுப்புக்கு இரண்டு குழுக்களும், வார நாட்களில் மாலை வகுப்புக்கு ஒரு குழுவும் கலந்துகொள்கின்றன.

02. வேலைவாய்ப்புகளுக்கான ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி (Certificate in English for Careers)

- இந்தச் சான்றிதழ் கற்கைநெறியின் முதலாவது குழு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சேர்க்கப்பட்டது. 63 அலுவலர்கள் பதிவுசெய்தனர். அவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர் - ஒரு குழு ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகளுக்குக் கலந்துகொள்வதுடன், மற்றைய குழு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் வகுப்புகளுக்குக் கலந்துகொள்கின்றது. இவர்களில் 54 அலுவலர்கள் இறுதித் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றனர்.

03. **Speechcraft Toastmasters நிகழ்ச்சித்திட்டம்** (Speechcraft Toastmasters Programme)

- இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு கட்டம் 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் மேலும் இரண்டு கட்டங்கள் தொடங்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக பல்வேறு நிறுவனங்களுக்காக பின்வரும் ஆங்கில மொழிப் பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டன:

1. பாராளுமன்றத்தின் அலுவலர்களுக்காக எழுதும் திறன்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - 12 நாட்கள், 36 மணிநேரம்
2. அரசு நிதித் திணைக்களத்திற்கான வணிகத் தொடர்புப் பட்டறைத் நிகழ்ச்சித்திட்டம் - 10 நாட்கள், 20 மணிநேரம்
3. வெளிவிவகார அமைச்சகத்தின் அலுவலகப் பணியாளர்களுக்கான பேச்சு ஆங்கிலப் பயிற்சித் திட்டம் - 17 நாட்கள், 100 மணிநேரம்
4. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான பேச்சு ஆங்கிலப் பயிற்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டம் - 17 நாட்கள், 100 மணிநேரம்
5. புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அலுவலர்களுக்கான தொழில்முறை ஆங்கில கற்கைநெறி - 4 நாட்கள், 24 மணிநேரம்

மேலும், அரசு மற்றும் தனியார் துறை அலுவலர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் நோக்குடன், 2025 ஆம் ஆண்டு முதல் பின்வரும் திட்டங்களைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது:

1. தொழில்முறை தொடர்பாடல் தொடர்பான டிப்ளமோ கற்கைநெறி (Diploma in Professional Communication - DPC)

இத்திட்டம் 2025 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2. மூன்று குறுகிய காலப் கற்கைநெறிகள் 2025 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது:

- IELTS தேர்ச்சி (IELTS Mastery)
- வாய்மொழித் தொடர்பாடலுக்குப் பயனுள்ள ஆங்கிலம் (Effective English for Verbal Communication)
- தொழில்முறை தொடர்பாடலுக்கான உயர்நிலை மட்டத்திலான இலக்கண கற்கைநெறி (Advanced Grammar for Professional Communication)

பின்வருவன 2024 ஆம் ஆண்டின் நடைபெற்ற சிறப்பு நிகழ்வுகளின் சில புகைப்படங்களாகும்

தொழில்சார் ஆங்கில டிப்ளோமா – 2023 இற்காக முதலாவது குழுவின் ஆட்சேர்ப்பின் ஆரம்ப சந்தர்ப்பம் (2024) மற்றும் வேலைவாய்ப்புகளின் பொருட்டு ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி – 2023 இற்கான முதலாவது குழுவை ஆட்சேர்ப்புச் செய்யும் ஆரம்ப சந்தர்ப்பம் 2024)

SpeechCraft பயிற்சி -முதலாவது குழு 2024 ஆரம்ப சந்தர்ப்பம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் மற்றும் IESL Toastmasters Club இடையில் ஒத்துழைப்பு முயற்சியாகும்.

SpeechCraft பயிற்சி -முதலாவது குழு 2024 ஆரம்ப சந்தர்ப்பம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் மற்றும் IESL Toastmasters Club இடையில் ஒத்துழைப்பு முயற்சியாகும்.



பயிற்சி ஆலோசனையில் சான்றிதழ் வழங்கும் வைபவம், இலங்கை பாராளுமன்றத்தின் அலுவலர்களுக்காக "எழுதும் ஆற்றலை மேம்படுத்தும்" நிகழ்ச்சித்திட்டம்

பயிற்சி ஆலோசனையில் சான்றிதழ் வழங்கும் வைபவம், அமைச்சு அலுவலர்களுக்கு நடாத்தப்பட்ட பேச்சுமொழி ஆங்கில நிகழ்ச்சித்திட்டம்.

12 தகவல் தொழில்நுட்ப நிலையம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு

டிஜிட்டல் மாற்றத்தை மேம்படுத்துவதற்கும், பொதுத்துறைப் பயிற்சி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை புத்தாக்குவதற்கும், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, தனது செயல்பாடுகளை நிறுவனத்தின் மூலோபாய இலக்குகளுடன் சீரமைப்பதன் மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கல்வி மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல், சேவையை மேம்படுத்துதல், டிஜிட்டல் பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் பொதுத்துறைக்குள் புதுமையான கலாசாரத்தை வளர்ப்பதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் இந்த இலக்குகள் கவனம் செலுத்துகின்றன. மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் தீர்வுகளின் மூலம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் பொதுத்துறைப் பயிற்சி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் முன்னணி நிறுவனமாக மாறுவதற்கு உதவுவதே இந்தப் பிரிவின் மிக முக்கியமான குறிக்கோளாகும்.

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பணிகள்

1. கையினால் செய்யப்படும் செயல்முறைகளை தானியங்குபடுத்துவதற்காக புதிய தகவல் அமைப்புகளை உருவாக்குதல்.
2. தகவல் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் சைபர் பாதுகாப்பு நடவடிக்கைகளை எளிதாக்குதல்.
3. டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்தி மேம்பாட்டுப் பணிகளின் மூலம் நிறுவனத்தின் பிரதிபிம்பத்தை மேம்படுத்துதல்.

- நோக்கம்: தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இலக்கு மேம்பாட்டு முயற்சிகள் மூலம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் இருப்பையும் அங்கீகாரத்தையும் மேம்படுத்துதல்.
- செயல்பாட்டு மூலோபாயம்: இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்காக சமூக ஊடகங்கள், நிறுவன வலைத்தளம் மற்றும் செய்திமடல்கள் போன்றவற்றை பயன்படுத்துதல். சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் செயற்படுத்துதல், நிகழ்நிலை சமர்ப்பித்தலை முகாமைத்துவம் செய்தல்.
- எதிர்பார்க்கப்படும் முடிவுகள்: பொதுமக்களின் விழிப்புணர்வு அதிகரிப்பு, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் திட்டங்களுடன் அதிக ஈடுபாடு, மற்றும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த பிரதிவிம்பத்தின் மேம்பாடு.
- செயல்திறன் அளவீடுகள்: சமூக ஊடகப் பின்தொடர்பவர்களின் அதிகரிப்பு, குறிப்பிட்ட காலப்பகுதியில் வலைத்தளப் பார்வையாளர்களின் எண்ணிக்கை, ஈடுபாட்டு விகிதங்கள். பகுப்பாய்வு மற்றும் பின்னூட்டத்தின் மூலம் மேம்பாட்டுத் திட்டங்களின் வெற்றியை அளவிடுதல்.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் அமுல்படுத்தும் நிகழ்நிலை திட்டங்களுக்கான ஒத்துழைப்பு சேவைகள்

- நோக்கம்: பங்கேற்பாளர்களுக்கு தடையற்ற நிகழ்நிலை அனுபவத்தை உறுதி செய்யும் வகையில் நிகழ்நிலை திட்டங்களுக்காக விரிவான தகவல் தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.
- செயல்பாட்டு மூலோபாயம்: நிகழ்நிலை கற்றல் தளங்களை இயக்குதல் மற்றும் நிர்வகித்தல், நம்பகமான இணைய இணைப்பை உறுதி செய்தல், மற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் பங்கேற்பவர்கள் இருவருக்கும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல். ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் உடனடியாகத் தீர்ப்பதற்காக நிகழ்நிலை அமைப்புகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் புதுப்பித்தல் மற்றும் பிழைகளை கண்டறிந்து சரிசெய்தல்.
- எதிர்பார்க்கப்படும் முடிவுகள்: நிகழ்நிலை திட்டங்களின் சீரான மற்றும் பயனுள்ள விநியோகம், பங்கேற்பாளர்களிடையே உயர் மட்ட திருப்தி மற்றும் குறைந்த இடையூறுகள்.
- செயல்திறன் அளவீடுகள்: பங்கேற்பாளர்களின் பின்னூட்டம், தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்க்க எடுக்கும் நேரம், நிகழ்நிலை திட்ட விநியோகத்தின் ஒட்டுமொத்த வெற்றிக்கான விகிதம்.

திட்டமிடப்பட்ட முக்கிய பணிகள் / முடிக்கப்பட்ட பணிகள்

தகவல் தொழில்நுட்பப் பிரிவு தனது இலக்குகளை அடைவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில், பல முக்கிய பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது:

I. மையப்படுத்தப்பட்ட கல்வி நிருவாக அமைப்பு (CAMS) **அறிமுகம் - 01 ஆவது கட்டம்**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அனைத்து திட்டச் செயல்பாடுகளையும் திறம்பட மற்றும் திறமையாக நிர்வகிப்பதற்கான ஒரு பொறிமுறையை வழங்குவதற்கு, ஒரு நிகழ்நிலை கல்வி நிருவாக அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது பின்வரும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது:

- மொடியுள்களை உருவாக்குதல்
- மொடியுள்களை வடிவமைத்தலுக்கான அனுமதி
- மொடியுள்கள் மிட்டமிடுவதனை திருத்தம் செய்தல்
- நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம்
- மாணவர் சேர்க்கை
- மாணவர் மதிப்பெண் நிர்வாகம்
- மாணவர் மதிப்பீட்டு நடவடிக்கைகள்
- வளப்பகிர்வாளர்களின் நிருவாகம்
- விரிவுரை கால அட்டவணைகளை திட்டமிடுதல்
- வளப்பகிர்வாளர்களை ஒதுக்குதல்
- வகுப்பறைகளை ஒதுக்குதல்
- மாணவர் தரவு முகாமைத்துவம்
- பணிப்பாய்வு தானியங்குமயமாக்கல் மற்றும் அறிக்கைகளைப் பெறுதல்



2. மையப்படுத்திய பரீட்சை முகாமை முறைமை (CEMS)

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பரீட்சை செயற்பாடுகளை நன்கு ஒழுங்கமைப்பதற்காக பின்வரும் அம்சங்களுடன் நிகழ்நிலை அடிப்படையுடன் முறைமை தயாரிக்கப்பட்டது.

- நிகழ்நிலை முறையில் விண்ணப்பங்கள் தொடர்பாக செயற்படல்
- விண்ணப்பதாரர்களை பதிவு செய்தல்.
- விண்ணப்பங்களின் சரிபார்ப்பு
- மண்டபங்களை ஒதுக்கீடு செய்தல்
- முடிவுகளை முகாமைத்துவம் செய்தல்
- அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல்
- குறுஞ் செய்தி சேவை மற்றும் மின் அஞ்சல் சேவைகளை ஒருங்கிணைத்தல்

பரீட்சை மையப்படுத்தப்பட்ட முகாமைத்துவ அமைப்பின் முக்கிய நோக்கம் யாதெனில், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பரீட்சை நடைமுறைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் கையாள்வதன் மூலம் பரீட்சை விண்ணப்பதாரர்களுக்கும் நிர்வாக பதவியணிக்கும் ஒரு சுமுகமான அனுபவத்தை வழங்குவதாகும். பாரிய அளவிலான தரவுகளை திறம்பட கையாள்வதற்கு விண்ணப்பதாரர்களின் தரவு முகாமைத்துவ அமைப்பு உதவுகின்றது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு மட்டுமே தரவுகளைப் பார்ப்பதற்கு அல்லது திருத்தி அமைப்பதற்கு அனுமதிப்பதன் மூலம் உணர்திறன் வாய்ந்த தகவல்களைப் பாதுகாப்பதை உறுதிசெய்யும் பொருட்டு அணுகல் கட்டுப்பாட்டு வழிமுறைகளையும் இந்த அமைப்பு கொண்டுள்ளது. அத்துடன், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தரவு காப்புப்பிரதிகளைப் பெறுவதன் மூலமும், நம்பகமான மீட்டெடுப்பு அமைப்புகள் மூலமும் கணினியில் தரவு சேதமடைவதற்கு எதிரான பாதுகாப்பையும் இந்த அமைப்பு வழங்குகிறது.

03. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளின் பெறுகை

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், பயிற்சி மற்றும் நிர்வாகச் செயல்முறைகளுக்கான டிஜிட்டல் மாற்றம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களில் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, அதன் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடைவதற்காக, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, வகுப்பறைகள் மற்றும் பல்வேறு துறைகளுக்குத் தேவையான டெஸ்க்டாப் கணினிகள், மடிக்கணினிகள், பேனல் பலகைகள் (panel boards) உள்ளிட்ட அத்தியாவசிய தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்து, நிறுவனம் முழுவதும் விநியோகித்துள்ளது.

- மேசைக்கணினிகள் (Desktop Computers) மற்றும் மடிக்கணினிகள் (Laptops) கொள்முதல்
- டிஜிட்டல் ஊடாடும் பலகைகள் (Digital Interactive Panels)
- ஸ்மார்ட் வணிக ப்ரொஜெக்டர் (Smart Business Projector)
- விடுதி வளாகத்திற்காக 2 நெட்வொர்க் சுவிட்சுகள் (Network Switches)
- மல்டிமீடியா உபகரணங்கள் - Sony R5 கெமரா
- நிகழ்ச்சி மேம்பாட்டிற்கான iMac மேசைக்கணினி (Desktop Computer)

4. மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பொது மக்களின் ஈடுபாடு

- **வலைத்தளத்தை மீண்டும் வெளியிடுதல்**

நிறுவனத்தின் டிஜிட்டல் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்தும் நோக்குடன் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, வலைத்தளத்தை வெற்றிகரமாக மீண்டும் வெளியிட்டுள்ளது. இந்த வலைத்தளம், அரச அலுவலர்கள் மற்றும் பொதுத்துறை அலுவலர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் பரந்த அளவிலான நிகழ்ச்சிகள், கற்கைநெறிகள் மற்றும் வளங்களுக்கான அணுகலை வழங்குகிறது. இந்த வலைத்தளத்தில் பயிற்சித் திட்டங்கள், ஆராய்ச்சி முயற்சிகள், ஆலோசனை சேவைகள் மற்றும் நிறுவனம் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகள் பற்றிய சமீபத்திய தகவல்கள் மற்றும் இட ஒதுக்கீடு அம்சங்கள் உள்ளன. பயனர் நட்பு வழிசெலுத்தல் (user-friendly navigation) மற்றும் இணையவழிக் கற்றல் விருப்பங்களுடன், பொதுத்துறையின் ஆளுகை மற்றும் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் பணியை இந்த வலைத்தளம் மேற்கொள்கின்றது. இது இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான வசதியையும், சமீபத்திய நிறுவனச் செய்திகளையும் வழங்குகிறது.

- **முகநூல் சார்ந்து நடவடிக்கைகளை மேம்படுத்தல்: 13,000 இற்கு அதிகமான பின்தொடர்பவர்கள் காணப்படுதல் பெருமைக்குரிய விடயமாகும்.**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் முகப்புத்தகப் பக்கம், 13,000 க்கும் மேற்பட்ட பின்தொடர்பவர்களைக் கொண்டிருப்பதில் பெருமிதம் கொள்கிறது. இது, பொதுத்துறை பயிற்சி, பல்வேறு நிகழ்வுகள் மற்றும் நிறுவன சாதனைகள் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்கான ஒரு முக்கிய தளமாக தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

பின்தொடர்பவர்களின் இந்த அதிகரித்த எண்ணிக்கை, நிறுவனத்தின் நோக்கம் மீதான ஆர்வத்தின் அதிகரிப்பை பிரதிபலிக்கிறது. இந்தப் பேஸ்புக் பக்கம், அரச அலுவலர்கள், பொதுத்துறை வல்லுநர்கள் மற்றும் பொது மக்கள் என ஒரு பரந்த பார்வையாளர்களை திறம்பட சென்றடைந்துள்ளது. பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் முக்கிய முன்முயற்சிகள் தொடர்பான புகைப்படங்கள், காணொலிகள் மற்றும் செய்திகள் இதில் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. ஆளுகை மற்றும் தலைமைத்துவ மேம்பாட்டை ஊக்குவிப்பதில்



இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் தெரிவுத்திறனையும் (Visibility) தாக்கத்தையும் மேம்படுத்துவதில் இந்தப் பேஸ்புக் பக்கத்தின் முக்கியத்துவம் மிக அதிகம்.

- **வெளியிடப்பட்ட மின்னஞ்சல் ஆவணங்கள்:**
  களமணா சஞ்சிகை மற்றும் ஸ்லீடா பத்திரிகை போன்ற முக்கியமான வெளியீடுகள் அவற்றின் மீது அணுகலை அதிகரிப்பதற்காக டிஜிடல் வடிவில் பராமரிக்கப்படுகிறது.

- **தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு**
  சைபர் பாதுகாப்பு குறித்த திறன் மேம்பாடு, உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் பயனர் திறன்கள் தொடர்பான (Computer Driving Licenses) மற்றும் உயர்மட்ட எக்செல் கற்கைநெறிகள் (High-level Excel courses) உட்பட பலவிதமான சிறப்பு தகவல் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்களை நாங்கள் ஒருங்கிணைக்கிறோம். பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, புதுப்பிக்கப்பட்ட, ஒவ்வொரு துறைக்கும் பொருத்தமான பயிற்சி அமர்வுகளை நடத்துவதில் எங்கள் முயற்சிகள் கவனம் செலுத்துகின்றன.

இந்தத் திட்டங்களை மிகக் கவனமாக ஒழுங்கமைத்து மேற்பார்வையிடுவதன் மூலம், வேகமாக மாறிவரும் தகவல் தொழில்நுட்பத் துறையில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான மதிப்புமிக்க அறிவையும் நடைமுறைத் திறன்களையும் பங்கேற்பாளர்கள் பெறுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

05. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது நிகழ்வுகளின் பொருட்டு தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்.

பின்னணி வடிவமைப்பு, ஆவணப்பட காணொளிகள், சிறப்புத் திட்டங்கள் மற்றும் ஊழியர் நல நிகழ்வுகள் உட்பட பல்வேறு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தடையின்றி நடைபெறுவதற்கு ஆதரவாக தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. அத்தகைய சில முக்கிய நிகழ்வுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

6. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது நிகழ்வுகளின் பொருட்டு தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்.

பின்னணி வடிவமைப்பு, ஆவணப்பட வீடியோக்கள், சிறப்புத் திட்டங்கள் மற்றும் ஊழியர் நல நிகழ்வுகள் உட்பட பல்வேறு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தடையின்றி நடைபெறுவதற்கு ஆதரவாக தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. அத்தகைய சில முக்கிய நிகழ்வுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

முடிவு

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் தொழில்நுட்பப் பரிணாமத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு முக்கிய பங்காற்றியுள்ளது. புத்திசாலித்தனமான முகாமைத்துவ அமைப்புகளை உருவாக்குதல், மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய மேம்பாடுகள் மூலம் இந்தத் துறை நிறுவனத்தின் பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது. இருப்பினும், தற்போது நடைபெற்று வரும் மற்றும் எதிர்காலத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வதை உறுதிசெய்ய நிதிச் சவால்களை எதிர்கொள்வது அத்தியாவசியமானது. நிறுவனத்தின் உள் செயல்பாடுகள் மற்றும் வெளிப்புற ஈடுபாடுகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் அதன் முன்னேற்றத்தைத் தொடர இந்தத் துறை நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

13 ‘சங்தரணி’ ஆய்வு நிலையம்

அரச நிர்வாகம் மற்றும் ஆளுகையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் புத்தாக்கம் குறித்த மாநாடு (BP-IPAG)

அரச நிர்வாகம் மற்றும் ஆளுகையில் சிறந்த நடைமுறைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் (BP-IPAG) குறித்த பகிரங்க மாநாடு 2024 மார்ச் 15 அன்று இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் நடைபெற்றது. 36 கருத்திட்டங்களில், டிஜிட்டல் ஆளுகை, நிலையான விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம், மற்றும் மனித ஆற்றல் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட 24 திட்டங்கள் சமர்ப்பிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டன.

நாள் ஆரம்பத்தில் தொடர்ச்சியான முக்கிய விளக்கக்காட்சிகளுடன் ஒரு ஈர்க்கக்கூடிய அமர்வுக்கான மேடை அமைக்கப்பட்டது. மாலையில் ஊக்கமளிக்கும் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்த மாநாடு பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அறிவுள்ளவர்களை ஒன்றிணைக்கும் ஒரு தனித்துவமான தளத்தை உருவாக்கியது. பங்கேற்பாளர்களுக்கு சமீபத்திய நடைமுறைகள் மற்றும் புதுமையான தீர்வுகள் குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும், கவனமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. இது ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும், ஒத்துழைப்பை மேம்படுத்தவும், யோசனைகளைப் பரிமாறிக்கொள்ளவும் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கியது, இது அனைத்து பங்கேற்பாளர்களின் அனுபவத்தையும் மேலும் வளப்படுத்தியது

ஸ்லீடா செய்திமடல் (SLIDA Newsletter)

ஸ்லீடா செய்திமடலின் கவர்ச்சியையும் அணுகலையும் மேலும் மேம்படுத்தும் நோக்குடன், அது மின்னணுப் பதிப்பாக மாற்றப்பட்டது. இது 2024 ஆகஸ்ட் மாதத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இந்த டிஜிட்டல் வடிவம், ஊடாடும் அம்சங்கள் மற்றும் கவர்ச்சிகரமான வடிவமைப்புடன் பயனர் அனுபவத்தை மேம்படுத்துவதுடன், இதைச் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், பரவலாக அணுகக்கூடிய செய்திமடலாகவும் மாற்றுகிறது. இந்த புதிய தளம் மூலம், நிறுவனத்தின் சமீபத்திய முன்னேற்றங்கள், நிகழ்வுகள் மற்றும் முயற்சிகள் குறித்து புதுமையான மற்றும் கவர்ச்சிகரமான முறையில் பரந்த பார்வையாளர்களைச் சென்றடைய நாங்கள் நோக்கம் கொண்டுள்ளோம்.

- **பீடாதிபதி ஆராய்ச்சித் திறன் பட்டறை (Faculty Research Knack Workshop)**

  இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, அதன் ஆசிரிய சமூகத்தினரிடையே ஒரு ஆராய்ச்சி கலாசாரத்தை வளர்க்கும் நோக்குடன், Research Knack Workshop Series பட்டறையை 2024 செப்டம்பர் 5 அன்று தொடங்கியது. இதில் பங்கேற்பாளர்கள் மூன்று மாத காலப்பகுதியில் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சி ஆய்வில் ஈடுபடுவார்கள். 2025 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஆராய்ச்சிக் கலந்துரையாடலில் அவர்கள் தங்கள் குறுகிய கால ஆராய்ச்சியைப் பற்றி விளக்கக்காட்சிகளை வழங்குவார்கள்.

- **இலங்கை அபிவிருத்தி நிர்வாகம் தொடர்பான சஞ்சிகை** (SLIDA)

  அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் பற்றிய ஆராய்ச்சிகள் மற்றும் கல்விசார் கட்டுரைகள் மூலம் அறிவை வளர்ப்பதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் வருடாந்தம் வெளியிடும் இலங்கை அபிவிருத்தி நிர்வாகம் தொடர்பான இலங்கை சஞ்சிகையானது (SLIDA) ஒரு தரமான வெளியீட்டைப் பேணுவதற்கான ஊக்கமளிக்கும் ஒரு முயற்சியாகும். பயன்பாட்டு ஆராய்ச்சி, சமகாலத்தினரால் மதிப்பாய்வு செய்யப்பட்ட கட்டுரைகள் மற்றும் உயர்மட்ட விடய ஆய்வுகள் (case studies) அடிப்படையிலான கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த சஞ்சிகையின் அடுத்த வெளியீடு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

- **“களமணா சஞ்சிகை” (திசெம்பர் 2024: வருடத்திற்கு இருமுறை வெளியிடப்படும்)**

  ஆழமான கட்டுரைகள், நேர்காணல்கள் மற்றும் பகுப்பாய்வுகள் மூலம் பொது நிர்வாகம் மற்றும் ஆளுகையின் உணர்வுகளை “களமணா சஞ்சிகை” வழங்குகிறது. ஒவ்வொரு இதழும் அரசு ஊழியர்கள் மற்றும் கொள்கைகளில் ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் உற்சாகத்தை உருவாக்கி, அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், விமர்சன ரீதியாக சிந்திக்கவும் ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விருது பெற்ற வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களின் பங்களிப்புகளுடன், களமணா சஞ்சிகை பொது நலனுக்காக அர்ப்பணிப்புள்ளவர்களுக்கு அறிவின் விளக்கமாக விளங்குகிறது.

- **இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் ஆய்வு அமர்வு**

  ஆராய்ச்சியில் வலுவான ஆர்வம் கொண்ட அரச துறை அலுவலர்களுக்கான தளத்தை வழங்குவதற்காக, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தனது பெறுமதிமிக்க ஆய்வு அமர்வை சனவரி 2025 இல் நடத்தத் தயாராகி வருகிறது. இந்த அமர்வு அரச துறை வல்லுநர்களுக்கு தங்கள் ஆய்வு முடிவுகளை முன்வைக்கவும், அறிவைப் பரிமாறிக் கொள்ளவும், சக்திவாய்ந்த ஆட்சி சவால்களுக்கு ஆதார அடிப்படையிலான தீர்வுகளை உருவாக்குவதற்கு பங்களிக்கவும் ஒரு பொன்னான வாய்ப்பை வழங்குகிறது.

- **முகாமைத்துவமற்ற பயிற்சிகள்**

  அரச துறையின் இரண்டாம் நிலை அதிகாரிகளின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்துவதற்காக, முகாமைத்துவமற்ற பயிற்சிப் பிரிவு 2024 ஆகஸ்ட் மாதம் ”இரண்டாம் நிலை அலுவலர்களின் அறிவை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பு” (KEASO) என்ற திட்டத்தைத் தொடங்கியது. இலக்கு சார்ந்த பயிற்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், இந்த அலுவலர்கள் தங்கள் பணிகளை மிகவும் திறம்படச் செய்ய மேம்படுத்துவதும், அரச துறையின் ஒட்டுமொத்த செயல்திறன் மற்றும் கண்டுபிடிப்புக்கு பங்களிப்பதும் இதன் நோக்கமாகும்.

பரிந்துரைக்கப்பட்ட KAESO கற்கைநெறிகள் பின்வருமாறு

தொடர் இலக்கம்	தொடர்	கற்கைநெறி	மொழிமூலம்	பாடவிதானம் மற்றும் பாடத்திட்டத்தை ஒருங்கிணைப்பதற்கு முன்மொழியப்பட்ட நிறுவனம	
1	HRM	தாபனக் கோவை: தொகுதி I லீவு	சிங்களம்/ தமிழ்	தாபனப் பிரிவு: பொது நிர்வாக அமைச்சு	
2	HRM	தாபனக் கோவை: தொகுதி I சம்பளங்கள், சம்பள மாற்றங்கள், கடன்கள் மற்றும் முற்பணங்கள	சிங்களம்/ தமிழ்	தாபனப் பிரிவு: பொது நிர்வாக அமைச்சு	
3	FIN	நிதி ஒழுங்குமுறைகள்	சிங்களம்/ தமிழ்	அரச நிதி திணைக்களம்- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்	
4	FIN	ஓய்வுபெறச் செய்விக்கும் செயற்றிட்டம்	சிங்களம்/ தமிழ்	ஓய்வூதிய திணைக்களம்	
5	SPC	அரச துறையின் விளைதிறனை அதிகரித்தல்	சிங்களம்/ தமிழ்	தேசிய உற்பத்தி செயலகம்	
6	SPC	இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழித்தல்	சிங்களம்/ தமிழ்	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம், இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துரைதல்களை ஆராயும் ஆணைக்குழு	

இந்த திட்டங்கள் பல அதிகாரிகளுக்கும் கற்றுக்கொள்வதை எளிதாக்குவதற்காக, தொலைதூரக் கல்வி முறை மூலம் இந்த திட்டம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

14

பொது நிர்வாகம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நிர்வாகப் பிரிவு, நிறுவகத்தின் சீரான மற்றும் வினைத்திறனான செயற்பாட்டை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் பொறுப்புகள் மனிதவள முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், அலுவலக நடைமுறைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கான உற்பத்தித்திறன் முகாமைத்துவ அணுகுமுறைகள் போன்ற முக்கிய துறைகள் உட்பட பல பிரிவுகளாக விரிவடைகின்றன. அத்தியாவசிய உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதையும், அவற்றை நன்கு பராமரிப்பதையும் உறுதி செய்வதன் மூலம் முகாமைத்துவப் பணிகளுடன் தொடர்புடைய அத்தியாவசிய உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றையும் இந்தப் பிரிவு மேற்கொள்கிறது.

நிறுவனத்தின் பதவியணியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முக்கிய கவனம் செலுத்தப்படும் பகுதியாகும். வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்த தேவையான திறன்களுடன் அதிகாரிகளை ஆயத்தப்படுத்த, நிர்வாகப் பிரிவு பயிற்சி வாய்ப்புகளை முனைப்புடன் வழங்குகிறது. இது நிறுவனத்தின் எதிர்பார்ப்புகளை வினைத்திறனாக பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றல் மிக்க ஊழியர்களை உருவாக்குகிறது. மேலும், இந்த பிரிவு நிறுவனங்களுக்கிடையேயான முறையான ஒருங்கிணைப்பு மூலம் நேர்மறையான உறவுகளை மேம்படுத்துவதோடு, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் வசதிகள் மற்றும் சேவைகளுக்கு பொது மக்களுக்கு எளிதான அணுகல் இருப்பதை உறுதி செய்கிறது.

இந்த பிரிவின் மற்றுமொரு சிறப்பம்சம் வெளிப்படைத்தன்மையையும் பதிலளிக்கும் தன்மையையும் பேணுவதாகும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுமக்களால் செய்யப்படும் கோரிக்கைகளுக்கு தேவையான தகவல்களை எளிதாகப் பெறுவதற்கு தேவையான நடைமுறைகள் தொடர்ச்சியாகப் பராமரிக்கப்படுகின்றன. மேலும், பொதுமக்கள் புகார்களுக்கு உடனடியாக பதிலளிப்பதற்கும் தீர்வு காண்பதற்கும் வினைத்திறன் மிக்க அமைப்புகள் செயற்படுத்தப்படுகின்றன. நுவரெலியா சுற்றுலா பங்களா இந்த பிரிவின் கீழ் உள்ள சிறப்பு வசதிகளில் ஒன்றாகும். இது வாடிக்கையாளர்களுக்கான ஆன்லைன் முன்பதிவுகளை முகாமை செய்கிறது. விரிவுரை மண்டபங்கள், வகுப்பறைகள் போன்றவற்றின் முன்பதிவுகளுக்கான அமைப்புகளும் முகாமை செய்யப்படுகின்றன. மாணவர் விடுதி வசதிகளை முகாமை செய்வதும் பராமரிப்பதும் இந்த பிரிவின் பொறுப்புகளில் அடங்கும்.

இந்த பிரிவு உயர் மட்ட அரசாங்க நிர்வாகங்களுடனும் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. அமைச்சரவை அலுவலகத்திலிருந்து பெறப்படும் அமைச்சரவை முடிவுகளை தேவையான நடவடிக்கைகளுக்காக தொடர்புடைய பிரிவுகளுக்கு அனுப்புவதும், பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்களை மூன்று மொழிகளிலும் தேவையான வடிவங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதும் உறுதி செய்யப்படுகிறது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஊழியர்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரிக்கும் பணிகளையும் இந்தப் பிரிவு வழிநடத்துகிறது. தேர்தல் தொடர்பான விடயங்களுக்கு வழிகாட்டுதலையும் மேற்பார்வையையும் இந்தப் பிரிவு மேற்கொள்கிறது.

மிக முக்கியமாக, நிறுவனக் கொள்முதல் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான பணிகளைச் செய்வதற்கான பொறுப்பை உடைய பிரிவும் நிர்வாகப் பிரிவுதான். நிறுவனச் செயற்பாடுகள் மற்றும் மூலோபாய நோக்கங்களுக்கு ஆதரவளிக்க தேவையான வளங்கள் நிறுவனத்திடம் இருப்பதை உறுதி

செய்வதற்காக அத்தியாவசிய பொருட்கள், சேவைகள் மற்றும் உள்கட்டமைப்புகளை மூலோபாய ரீதியாகப் பெறுவது இதில் அடங்கும். தற்போது நடைபெற்று வரும் பயிற்சி வாய்ப்புகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்படுவதை உறுதி செய்யும் இந்தப் பிரிவின் பங்கு, ஊழியர் மேம்பாடு மற்றும் வள முகாமைத்துவம் குறித்த அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறது.

2024 ஆம் ஆண்டில், நிறுவனத்தின் உள்கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்கு நேரடியாக பங்களிக்கும் வகையில், நிர்வாகப் பிரிவு பல்வேறு பணிகளைச் செயல்படுத்தியதுடன், பல குறிப்பிடத்தக்க திட்டங்களையும் நிறைவு செய்தது. அடையப்பட்ட முக்கிய சாதனைகள் பின்வரும் துறைகளில் அடங்கும்:.

- உள்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு:
    - இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கட்டிடத்தின் கூரை புனரமைக்கும் பணிகள் நிறைவு.
    - நிறுவனத்தின் கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் நீர்ப்பாதுகாப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
    - விடுதிக்குச் செல்லும் நடைபாதையின் மேற்கூரையை புனரமைத்தல் மற்றும் நீர்ப்பாதுகாப்பு பணிகள் நிறைவு
- தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் (கொள்முதல் திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல்):
    - மடிக்கணினிகள் கொள்முதல் செய்தல்
    - டெஸ்க்டாப் கணினிகள் மற்றும் தொடர்ச்சியான மின்வழங்கல் அலகுகள் கொள்முதல்.
    - 12 டிஜிட்டல் ஊடாடும் பலகைகள் வழங்கப்பட்டு நிறுவுதல்.
    - ஒரு ஸ்மார்ட் வர்த்தக ப்ரொஜெக்டர் வழங்கப்பட்டு நிறுவுதல்.
    - ஒரு நகல் எடுக்கும் இயந்திரம் கொள்முதல்.
    - முக அடையாளம் காணும் வயர்லெஸ் நேரப்பதிவு இயந்திரம் கொள்முதல்.
    - விடுதி வளாகத்திற்காக 02 நெட்வொர்க் சுவிட்சுகள் கொள்முதல்.
    - ஒரு iMac டெஸ்க்டாப் கணினி கொள்முதல்.
    - 14 குளிரூட்டல் இயந்திரங்களை கொள்முதல் செய்தல்.
    - ஒரு பேப்பர் கொலேட்டர் இயந்திரம் வழங்கப்பட்டு நிறுவுதல்.

இந்த பணிகள் மூலம் நிர்வாகப் பிரிவின் முன்முயற்சி அணுகுமுறை நிறுவனத்தின் இயற்பியல் சூழல், தொழில்நுட்ப உள்கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு கருவிகளை மேம்படுத்துவதில் பிரதிபலிக்கிறது. இது நிறுவனத்தின் கல்வி மற்றும் நிர்வாகப் பணிகளுக்கு நேரடியாக ஆதரவளிக்கிறது.

பதவியணி விபரங்கள்

2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பதவியணி

தொகுதி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	உள்ளவாறான பதவியணி	வெற்றிடங்கள்
சிரேஷ்ட	47	26	21
மூன்றாம் நிலை	23	13	10
இரண்டாம் நிலை	58	49	09
ஆரம்ப நிலை	38	28	10
மொத்தம்	166	116	50

2024 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புகள்

தொடர் இலக்கம்	பதவி	ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அடிப்படை
1	சிரேஷ்ட ஆலோசகர்	01	இரண்டாம் நிலை அடிப்படையில்
2	உதவி ஆலோசகர்	01	இரண்டாம் நிலை அடிப்படையில்
3	உதவி பணிப்பாளர்	01	இரண்டாம் நிலை அடிப்படையில்
4	நிதி உதவியாளர்	01	நிரந்தர அடிப்படையில் (தரமுயர்வு)
5	நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	02	நிரந்தர அடிப்படையில் (தரமுயர்வு)
6	முகாமைத்துவ உதவியாளர்	01	இரண்டாம் நிலை அடிப்படையில்
7	கிராபிக் திட்டமிடல் உதவியாளர்	01	நிரந்தர அடிப்படையில்
8	தொழில்நுட்ப உதவியாளர்	01	நிரந்தர அடிப்படையில் (தரமுயர்வு)

15 நூலகம் மற்றும் தகவல் சேவைகள் - டாக்டர் கலாநிதி. எச்.எஸ். வனசிங்க நூலகம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நூலகம், பயிற்சித் திட்டங்களில் பங்கேற்கும் பொது மற்றும் தனியார் துறை நிர்வாக அலுவலர்களின் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது. குறிப்பாக, பயனர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ ஆய்வுகள் தொடர்பான பரந்த அளவிலான புதிய புத்தகங்களை இந்த நூலகம் கொண்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் புதிய பயிற்சிப் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல், தற்போதுள்ள பாடத்திட்டங்களைப் புதுப்பித்தல், மற்றும் ஆலோசகர் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால், இந்த நூலகம் தேவையான தகவல்களைப் பெறுவதற்கு வசதிகளை வழங்குகிறது.

உள்ளடக்கப்படும் ஆய்வுத் துறைகள்

அரசாங்கக் கொள்கை, நல்லாட்சி, மனிதவள மேம்பாடு, பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல், உற்பத்தித்திறன், சுற்றுச்சூழல் முகாமைத்துவம், செயல்திறன் மேம்பாடு, உலகமயமாக்கல், திட்ட முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், நிலையான அபிவிருத்தி, தனியார்மயமாக்கல், மின்-அரசாங்கம் மற்றும் நூலகத்தால் வழங்கப்படும் மின்-வணிக சேவைகள் ஆகியவை இதில் அடங்கும்.

நூலகத்தால் வழங்கப்படும் சேவைகள்

கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான புத்தகங்களைப் பயன்படுத்த, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் நூலகம் திங்கள் முதல் சனி வரை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை திறந்திருக்கும். இந்த நூலகம் ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும். இது இலங்கையில் கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஆதரவை வழங்குகிறது. நிகழ்நிலை தரவுத்தளங்கள், நூலக அட்டவணைகள், பைலட் லேபிள்கள் போன்ற கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலமும், நூலக பதவியணியின் உதவியுடனும் நூலகம் தொடர்பான தகவல்களைப் பெறலாம்.

கூடுதலாக, தனிப்பட்ட ஆய்வுகளுக்கான வசதிகள், மடிக்கணினிகள் மற்றும் மின்னணு அச்சு சேவைகளும் நூலகப் பயனர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த நூலகத்தில் இல்லாத புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் நூலகங்களுக்கிடையேயான பரிமாற்றம் மூலம் பிற நூலகங்களிலிருந்து பெறப்படுகின்றன. தகவல் வளங்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தரத்தையும் செயல்திறனையும் பராமரித்து அச்சிடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நூலகப் பணிகளை தானியங்குபடுத்துவதற்காக, KOHA மென்பொருளைப் பயன்படுத்தி புத்தக விவரங்களை தரவு அமைப்பில் உள்ளிடும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

நூலகத்திற்கான தகவல் வளங்கள் பெறுவதில் முன்னேற்றம்

வகை	எண்ணிக்கை
கொள்முதல்	93
இலவசமாகப் பெற்றது	6
வழங்கப்பட்ட சிறப்பு மானியங்கள்	32

2024 ஆம் ஆண்டில் நூலகங்களின் பொருட்டு தகவல்கள் வளங்களை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட ஒட்டுமொத்த செலவினம் பின்வருமாறாகும்.

தொடர்	கொள்வனவு செய்யப்பட்ட உருப்படிகள்	செலவினம் ரூபா
1	நூல்கள்	98,953.15
2	வார வெளியீடுகள் (உள்நாடு)	3,000.00
3	வார வெளியீடுகள் (வெளிநாடு)	_
4	செய்திதாள்	175,964.00
	மொத்தம்	277,917.00

16 சிறப்பு நிகழ்வுகள் மற்றும் அடைவுகள்

நல்லாட்சிக்கான தேசிய நிலையத்தில் 1,500 இலங்கை அலுவலர்களுக்கு பயிற்சி

இந்திய நிர்வாக சேவையின் திரு. வி. ஸ்ரீனிவாஸ் தலைமையில், நல்லாட்சிக்கான தேசிய நிலையத்தின் (NCGG) பணிப்பாளர் நாயகம் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுப் புகார்கள் திணைக்களத்தின் (DARPG) செயலாளர், தனிப்பட்ட, பொதுப் புகார்கள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுப் புகார்கள் திணைக்களம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் மட்டக் குழு, ஒரு முக்கியப் பணிக்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு வருகை தந்தது. இலங்கை அரச துறை அதிகாரிகளின் திறன் மேம்பாடு தொடர்பான உயர் அதிகாரிகளைக் கொண்ட இக்குழு, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக்க கலுவெவ மற்றும் பிற மேலதிக பணிப்பாளர் நாயகங்களுடன் பயனுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டது. புதிய ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி, எதிர்காலத்தில் 1,500 இலங்கை அரச அதிகாரிகள் நல்லாட்சிக்கான தேசிய மையத்தில் பயிற்சி பெறுவார்கள்.

நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுப் புகார்கள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புச் செயலாளர் நரேந்திர பஹதூர் சிங் ராஜ்புத், நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் உதவிப் பேராசிரியர் அலுதோஷ் பால் சிங் மற்றும் அந்த நிறுவனத்தின் உதவி ஆய்வாளர் முகேஷ் குமார் பண்டாரி போன்ற முக்கிய அதிகாரிகளும் இந்த இந்தியக் குழுவில் அடங்குவர்.

நிலையான நிர்வாகத்திற்கான சுற்றுச்சூழல் தலைமைத்துவம்: பிகோ ட்ரெயில் (Pekoe Trail) பாதையில் பயணம்

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரிகளுக்காக 2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட "Beyond the Horizon" எனும் செயலமர்வுத் தொடரின் ஒரு அங்கமாக, மிக அழகான பிகோ ட்ரெயில் பாதையின் ஊடாக நுவரெலியா வரை இரண்டு நாள் கல்விப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. ”நிலையான நிர்வாகத்திற்கான சுற்றுச்சூழல் தலைமைத்துவம்” என்ற தலைப்பில் கவனம் செலுத்திய இந்த நிகழ்ச்சியில், பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவத் துறைப் பேராசிரியர் அசோகா

தங்கோல்ல அவர்களால் சந்ததென்னை வனக் கல்லூரியில் நடத்தப்பட்ட ”சுற்றுச்சூழல் உணர்திறன் மற்றும் கொள்கை பொறுப்பு” எனும் கருத்தமரவும் இடம்பெற்றது.

செய்திமடல்

ஸ்லீடா செய்திமடல் சமீபத்திய செய்திகள், சாதனைகள் மற்றும் வரவிருக்கும் நிகழ்வுகளை வழங்குகிறது. மேலும், இது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் எதிர்கால திட்டங்கள் மற்றும் அத்தியாவசிய புதுப்பிப்புகள் குறித்து அரசு அலுவலர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.



இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் இணையத்தளம் மீள வெளியீட்டு நிகழ்வு

2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு சிறப்பு வெளியீட்டு நிகழ்வில், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் புதிதாக வடிவமைக்கப்பட்ட இணையத்தளம் வெளியிடப்பட்டது. பங்குதாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் சிறந்த சேவையை வழங்குவதற்காக, இந்த புதிய மேம்படுத்தப்பட்ட இணையத்தளம் பயனர் நட்பு இடைமுகம், மேம்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் மேம்படுத்தப்பட்ட அம்சங்களை வழங்குகிறது. இது டிஜிட்டல் மாற்றத்திற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும், வினைத்திறன் மிக்க, நவீன முறையில் பொது சேவைப் பயிற்சி வழங்குதல் மற்றும் தகவல்களைப் பரப்புதல் ஆகியவற்றையும் பிரதிபலிக்கிறது

Speech craft நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியை கொண்டாடுதல்

SLIDA மற்றும் IESL Toastmasters Club இடையேயான ஒரு கூட்டு முயற்சி

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் மற்றும் IESL டோஸ்ட்மாஸ்டர்ஸ் கழகம் (Toastmasters Club) இடையேயான ஒரு கூட்டு முயற்சியாக நடத்தப்பட்ட ஸ்பீச் கிரா.ஃப்ட் (Speechcraft) பயிற்சித் திட்டத்தின் முதல் அமர்வு நிறைவடைந்தது. இந்த நிகழ்ச்சியில் சிறந்து விளங்கிய பங்கேற்பாளர்களுக்கு, SLIDA இன் பணிப்பாளர் நாயகத்தால் ஒரு பிரமாண்டமான விழாவில் பாராட்டுகள் வழங்கப்பட்டன.

பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி

நான்கு நாள் செறிவான பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி (TOT) திட்டத்தில், எம்பிலிபிட்டிய தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் அலுவலர்களுக்கு அவர்களின் சிறப்பான பணிகளுக்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அவர்கள் வெற்றிகரமாக முடித்த பயிற்சித் திட்டத்தைப் பாராட்டி, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. நாலக கலுவெவ மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி/ முகாமைத்துவம் அல்லாத பயிற்சி) டாக்டர். டபிள்யூ.எம்.எம்.ஜி.டி. விஜேகோன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்.

ஹுவாசோங் அறிவியல் (Huazhong University) மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம்செய்தல்

இரு நிறுவனங்களுக்கிடையேயான கல்வி உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன், சீன மக்கள் குடியரசின் ஹுவாசோங் பல்கலைக்கழகத்தின் (Huazhong University of Science and Technology) பிரதிநிதிகள் குழு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு விஜயம் செய்தது. இந்த பிரதிநிதிகள் குழுவிற்கு ஹுவாசோங் பல்கலைக்கழகத்தின் சர்வதேச கல்வி நிறுவனத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஸோஹ்யு லிப்பிங் தலைமை தாங்கினார்.

உயர்கல்வி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி தொடர்பான கூட்டு வாய்ப்புகளை ஆராய்வது, அறிவு மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளைப் பரிமாறிக்கொள்வதற்கு உதவும் கூட்டணிகளை மேம்படுத்துவது, மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்துடன் ஏற்கனவே செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது குறித்து இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் விமுக்தி ஜனாதர மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகங்களுடன் இந்த பிரதிநிதிகள் குழு பயனுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துதல்: இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையிலான திறன் மேம்பாட்டு ஒப்பந்தம்

மாண்புமிகு ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் முக்கிய விளைவாக, இலங்கையின் சிவில் சேவையாளர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக நீண்டகால ஒப்பந்தத்தை ஆரம்பிப்பதற்காக இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கைச்சாத்திடப்பட்டது. நல்லாட்சிக்கான தேசிய நிலையம் (NCGG) மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA) ஆகியவை இதன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளும். இந்த நிகழ்ச்சி மூலம் ஐந்து வருட காலப்பகுதியில் 1,500 அரசாங்க அலுவலர்கள் பயிற்சி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் இருதரப்பினரிடையே நிகழ்நிலையில் மூலம் நடைபெற்றது. நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் பணிப்பாளர் நாயகம், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.



இலங்கை பொலிஸ் சேவையின் அலுவலர்களுக்கான சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டம்

இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு மன்றத்துடன் (Sri Lanka CERT) இணைந்து நடத்தப்பட்ட இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டத் தொடரின் கீழ், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் இலங்கை பொலிஸ் அலுவலர்களுக்காக ஒரு அமர்வை நடத்தியது. இதில் சட்ட அமுலாக்கத்தில் இணையப் பாதுகாப்பின் முக்கியத்துவம், தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு

கொள்கைகள், இணையக் குற்றங்களுக்கான பதிலளிப்பு, டிஜிட்டல் ஆதாரங்களைப் பாதுகாத்தல், இணையப் பாதுகாப்பில் சட்ட அமுலாக்கத்தின் வலுவான பங்கு போன்ற மிக முக்கியமான விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் பதில் செயலாளர் திரு. வருண ஸ்ரீ தனபால, இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் கருணாசேன உட்பட பல முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்த பயனுள்ள நிகழ்ச்சியை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் திட்ட மேம்பாடு) திரு. ருஷித்த தர்மசேன ஒருங்கிணைத்தார்.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு வெளியே நடைபெற்ற பயிற்சி (SLIDA Outbound Training)

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தனது ஊழியர்களுக்காக கிரியெல்ல விஜய ரிசோர்ட்டில் (Kiriella Wijaya Resort) ஒரு பயனுள்ள வெளிப்புறப் பயிற்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தது. குழு உணர்வை வளர்க்கும் நடவடிக்கைகளின் மூலம் கூட்டுச் செயற்பாடு, தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்ப்பது போன்றவற்றுக்கு இந்தப் பயிற்சி முக்கிய கவனம் செலுத்தியது.

ஸ்லீடா தினம் (SLIDA Day)

குழு செயல்பாடு: ஒற்றுமை மற்றும் ஊழியர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கான SLIDA தினம் 2024

SLIDA தினம் 2024 என்பது முழு நிறுவன ஊழியர்களையும் ஒன்றிணைக்கும் ஒரு சிறப்பு மற்றும் மறக்க முடியாத கொண்டாட்டமாகும். இது ஒற்றுமை மற்றும் ஊழியர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. கூட்டுறவு மற்றும் நேர்மறையான பணிச்சூழல் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பல நடவடிக்கைகளை இது கொண்டிருந்தது.

இந்த நாளின் சிறப்பம்சங்களில் மகிழ்ச்சியான மற்றும் உற்சாகமான இசை ஓய்வு அமர்வு, அதைத் தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் "அவுருது உத்சவய" (புத்தாண்டு விழா) ஆகியவை அடங்கும். ஊழியர்கள் தங்கள் பல்வேறு திறன்களையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்திய மிகவும் கவர்ச்சிகரமான திறமை நிகழ்ச்சி "மியுரங்க சந்தாவ" உடன் இந்த விழா நிறைவடைந்தது. இந்த SLIDA தினம் பரஸ்பர நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் வெற்றிகரமாக வலுப்படுத்தியதுடன், ஊழியர்களிடையே ஒற்றுமை உணர்வையும் மீண்டும் உறுதிப்படுத்தியது.

17 கணக்காய்வுக் குழு அறிக்கை - 2024

கணக்காய்வுக் குழுவின் முதன்மைப் பணி, உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வு, உளளக் நிதி கட்டுப்பாடுகள் மற்றும் நிதி அறிக்கையிடல் ஆகிய துறைகள் தொடர்பாக ஆளுகைச் சபையின் மேற்பார்வைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு உதவுவதாகும்.

2021.11.16 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2021/01 கொண்ட அரசாங்க நிறுவனங்களின் நல்லாட்சிக்கான வழிகாட்டுதல்கள் சுற்றறிக்கையின் அத்தியாயம் 4.2 இன் ஏற்பாடுகளின்படி, போதுமான உளளக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவத்துடன் நிறுவனத்தின் நேர்மை, கணக்கியல் தரநிலைகள், நிதி அறிக்கையிடல் செயல்முறைக்கு இணங்க சரியான நேரத்தில் தயாரிக்கப்படும் தரமான நிதி அறிக்கைகள் தொடர்பான நிர்வாக சபையின் பணிகளுக்கு, தற்போது நிர்வாக சபையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட கணக்காய்வுக் குழு உதவுகிறது.

- **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கட்டமைப்பு**

  2023 ஆண்டுக்கான ஆளுகைச் சபையால் நியமனம் செய்யப்பட்ட கணக்காய்வு குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறாகும்.

பெயர்	நியமனம் செய்யப்பட்ட திகதி
திரு.ஜுட் நிலுக்ஸான். பணிப்பாளர் நாயகம் தேசிய வரவு செலவு திணைக்களம்	முதலாவதாக நியமனம் செய்யப்பட்ட திகதி - 2022.03.02 இரண்டாவதாக நியமனம் செய்யப்பட்ட திகதி - 2022.11.09 இது வரை
செல்வி ஜெகராசசிங்கம் ஆளுகைச் சபையின் உறுப்பினர்	2020.11.09 தொடக்கம் இது வரை
திரு ஹர்ஸ விஜேவர்தன மேலதிக செயலளார் பிரதமர் அலுவலகம்	2023.05.30 தொடக்கம் இது வரை

கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் பிரதிநிதியான கணக்காய்வு அலுவலர் திருமதி. ஏ.பி. ரேணுகா அல்விஸ் ஒரு அவதானிப்பாளராக கலந்துகொண்டார். கூடுதலாக, பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளரும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களில் ஒரு அவதானிப்பாளராக கலந்துகொண்டார். குறிப்பிட்ட விடயங்கள் குறித்து கணக்காய்வுக் குழுவிற்குத் தெரிவிப்பதற்காக, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் அவ்வப்போது கணக்காய்வுக் குழுவின் முன் அழைக்கப்பட்டனர்.

2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வாளர், குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். இந்த ஆண்டில் இரண்டு (02) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தக் கூட்டங்களின் அறிக்கைகள் நிர்வாக சபைக்கு உரிய நேரத்தில் அறிவிக்கப்பட்டன. ஒரு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததாலும், நிறுவனத்திற்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படாததாலும் மூன்றாவது மற்றும் நான்காவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை.

- **குழுவின் பொறுப்புகள்**

கணக்காய்வுக் குழு பிரதானமாக, நிதி அறிக்கைகளின் துல்லியம் மற்றும் ஒருமைப்பாடு, உள் கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் நிறுவனக் கொள்கைகள், சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்குதல் ஆகிய துறைகள் தொடர்பான நிர்வாக சபையின் ஒட்டுமொத்த சுயாதீன மேற்பார்வைப் பணிகளுக்கு உதவுவதற்காக நிறுவப்பட்டுள்ளது. இது நிறுவனத்தின் முகாமைத்துவத்தையும் எதிர்கால இருப்பையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

உள் கட்டுப்பாட்டு அமைப்புகளின் செயல்திறன், நிதி அறிக்கையிடல், இடர் முகாமைத்துவம், சட்டங்கள், இலங்கை மத்திய வங்கி மற்றும் பிற ஒழுங்குமுறை நிறுவனங்களால் விதிக்கப்படும் உத்தரவுகள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்குதல், அத்துடன் நிறுவனத்தின் நிர்வாகச் செயல்முறையின் போதுமான தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்வதை மேற்பார்வையிடும் பொறுப்பு குழுவிடம் உள்ளது.

இலங்கையின் தொடர்புடைய தொழில்முறை மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு கவனம் செலுத்தி, குழு உள் மற்றும் வெளிப்புற சான்றளிப்புப் பணிகள் தொடர்பாக தனது சுயாதீன மேற்பார்வைப் பணியை மேற்கொள்ள வேண்டும். மேலும், உள் மற்றும் வெளிப்புற கணக்காய்வாளர்கள் இருவரின் சுயாதீனத்தன்மை, கணக்காய்வுச் செயல்முறையின் புறநிலைத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்ய வேண்டும்.
நிதி ஆண்டில் குழுவின் பணிகள்

- **பிரதான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள்**

அவதானிப்புகள்	பரிந்துரை / செவ்வைப்படுத்தும் நடைமுறை
பொருட்களை ஆய்வு செய்யும் பணிகளை மேற்கொள்வது மற்றும் சொத்துப் பதிவேடுகளைப் புதுப்பிக்கும் பணிகளை மேற்பார்வையிடுதல்	இப்பணியை நிறைவு செய்த பிறகு, 2024 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் சொத்துக்களின் சரியான மதிப்பை உள்ளீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் (SLIDA) தற்போது நிலவும் பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் அத்தியாவசியமற்ற பதவிகளை மறுசீரமைப்பதற்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.	அத்தியாவசியமற்ற மற்றும் அத்தியாவசியப் பதவிகள் அடங்கிய பட்டியல், அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
முகாமைத்துவ பயிற்சி நெறிகளை முறையாக நடைமுறைப்படுத்தாமை	2025 ஆம் அண்டில் முகாமைத்துவம் அல்லாத பயிற்சி கற்கைநெறிகளை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

3 முதல் 5 வருடங்கள் நிலுவையிலுள்ள நிலுவைகளை அறவிடுவதற்கும், கணக்குகளைத் தீர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபை (Audit and Management Board) மற்றும் ஆளுகை சபையின் (Governing Council) பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் (outstanding balances) தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
நூலகத்தின் புத்தகங்களை ஆய்வு செய்யும் நடவடிக்கைகள்	நூலகப் புத்தகங்கள் ஆய்வு செய்யும் பணிகளைப் பற்றிய அறிக்கை கண்காணிக்கப்பட்டது. அதில் உள்ள குறைபாடுகள் மற்றும் போதாமைகள் குறித்து ஒரு சுதந்திரமான அறிக்கையை தயாரிக்குமாறு உள்ளக கணக்காய்வாளரிடம் (Internal Auditor) அறிவிக்கப்பட்டது.
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பரீட்சை கைந்நூலை இற்றைப்படுத்தல்.	தேர்வுகளை முறையான கட்டமைப்பிற்குள் நடத்துவது தொடர்பாக, தேர்வு கையேடு (Examination Handbook) ஒன்றை தயாரிக்குமாறு தணிக்கை மற்றும் முகாமைத்துவக் குழு (Audit and Management Committee) நிர்வாகத்திற்கு அறிவித்தது.

- **நிதி அறிக்கையிடல் முறைமை**

  பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக, குழுவானது தற்போது நடைமுறையில் உள்ள நிதி அறிக்கையிடல் முறையின் செயல்திறனை (effectiveness of the financial reporting system) மறுஆய்வு செய்யும். கணக்கீட்டுப் புத்தகங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு (Sri Lanka Accounting Standards) இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக ஆளுகைச் சபையின் (Governing Council) பொறுப்பை நிறைவேற்றுவதில், குழுவானது ஆளுகைச் சபைக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது. அனைத்து பரிவர்த்தனைகளும் துல்லியமாகவும் முழுமையாகவும் கணக்கீட்டுப் புத்தகங்களில் பதிவு செய்யப்படுவதை நியாயமான முறையில் உறுதி செய்வதற்காக, உளளக கட்டுப்பாட்டு முறைகள் (internal control systems) மற்றும் செயல்பாட்டு நடைமுறைகளின் (operational procedures) போதுமான தன்மையையும் செயல்திறனையும் குழு மறுஆய்வு செய்யும்.

  நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும்போது மேற்கொள்ளப்படும் முக்கியமான அனுமானங்கள் (important assumptions) மற்றும் தீர்ப்புகள் (judgments) அடங்கிய துணைத் தகவல்களுடன் கூடிய, அனைத்து காலாண்டு தணிக்கை செய்யப்படாத இடைக்கால நிதிநிலை அறிக்கைகளும் (unaudited interim financial statements) மற்றும் நிதிநிலை அறிக்கைக் குழுவால் (Financial Statements Committee) ஆய்வு செய்யப்பட்டன.

- **உள்ளக நிருவாக நடவடிக்கைகள்**

  நிதி அறிக்கையிடல் முறைமை தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயல்திறனை (effectiveness of internal controls) கணக்காய்வுக் குழு (Audit Committee) மதிப்பீடு செய்தது. இந்தச் செயல்முறையின் மூலம், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக, ஆபத்துக் கட்டுப்பாட்டிற்கான (risk control) உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகளின் போதுமான தன்மையும், செயல்திறனும் மதிப்பீடு செய்யப்படுகிறது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக உள்ளக தணிக்கையாளர்களால் (internal auditors) வழங்கப்படும் பரிந்துரைகள் தொடர்பில் முகாமைத்துவத்தால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை குழு உறுதி செய்கிறது. உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பின் (internal control framework) அடிப்படையானது, ஆளும் சபைக்கு (Governing Council) அதன் பணிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் வாய்ப்பளிக்கிறது.

- **உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்**

  கணக்காய்வு குழுவின் பணியானது கணக்காய்வு செய்யப்படும் நடவடிக்கைகளிலிருந்து சுயாதீனமானது (independent) என்பதை உறுதி செய்கிறது. இக்குழுவிடம் நிபுணத்துவம் (expertise) உள்ளதுடன், முறையான தொழில்முறைச் சந்தேகம் (professional skepticism) பயன்படுத்தப்படுகிறது.

  குழுவானது நிதி ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாக, வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை (annual internal audit plan) மீளாய்வு செய்கிறது. அத்துடன், தடையற்ற உறுதிப்படுத்தும் சேவையை வழங்குவதற்காக நிறுவனத்திற்கு உள்ள வளங்களின் போதுமான தன்மையை (adequacy of resources) மதிப்பிடுகிறது. உள்ளக கணக்காய்வுச் செயல்பாட்டின் மூலம், உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பின் (internal control system) செயல்திறனையும், ஒழுங்குமுறைத் தேவைகளுடன் இணங்குதலையும் (compliance with regulatory requirements) குழு மீளாய்வு செய்கின்றது. உள்ளக கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்படும் பலவீனங்களை (weaknesses) குழு மிக முக்கியமான விடயமாகக் கருதி ஆராய்கிறது.

ஜுட் நிலுக்ஸான்
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

PAF/B/SLIDA/01/24/05 2025 யூன் மாதம் …….. ஆம் திகதி

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்,

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுகள்

1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின்) 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கு ஏற்புடையதான தகவல்களும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளைக் கொண்டமைந்த 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலம் 2016 ஆம் ஆண்டில் இலவசக் கொடுப்பனவு ஒன்றாக நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருந்த நுவரெலியா சுற்றுலா விடுதிக்கான காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்திக்கு அமைய சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களின் பொருட்களை மீள்மதிப்பீடு செய்யும் போது, தொடர்புடைய சொத்து வகை முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றாலும், ரூபா. 7,206,736 தொகை பெறுமதியான நுவரெலியா சுற்றுலா விடுதி அமைந்துள்ள கட்டிடம் தவிர மற்ற கட்டிடங்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டு உள்ளன.

(இ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மூலதனக் கொடைகள் என்ற வகையில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா. 25,203,016 தொகையும் மற்றும் முன்னைய ஆண்டுகளில் கிடைக்கப் பெற்றிருந்த திறைசேரிக் கொடைகள் கடன்தீர் நிதி சேர்க்கப்பட்டதன் பின்னர் மீதமுள்ள ரூபா. 491,907,397 தொகையும், இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமம் 11 இற்கு அமைய பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானமாகக் கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்க வேண்டும் எனினும் மூலதனக் கொடைகளின் கீழ் கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்ததுடன் மேற்படி கொடைகளுக்கு உரிய மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கடன்தீர் நிதிப் பெறுமதி ரூபா. 19,963,739 தொகை சீர்செய்யப்பட்டதன் பின்னர் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 497,146,674 தொகை இடைநிறுத்தப்பட்ட வருமானங்கள் என்ற வகையில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஈ) இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமம் 19 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம், ரூபா. 34,507,720 தொகை ஆகிய பணிக்கொடை ஏற்பாடுகள் தொடர்பான சேவைக்குப் பின்னரான பயன் தொகைகளின் பொறுப்பு மற்றும் தொடர்புடைய தற்போதைய சேவைகளுக்குரிய செலவின் தற்போதைய மதிப்பு என்பவற்றை கணக்குகளில் குறிப்பிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ) 2024 பெப்ரவரி 22 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டு இருந்த ரூபா. 2,000,000 மதிப்புள்ள கணினி மென்பொருள் ஒன்று நிறுவனத்தின் தேய்மானக் கொள்கையின்படி 20 சதவீதம் தேய்மானம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், அதனை 10 சதவீதமாகக் கொண்டு தேய்மானம் செய்யப்பட்டு, இருந்தமையினால் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் தேய்மானச் செலவு ரூபா. 166,666 தொகை குறைவாக கணக்கில் சேர்க்கப்பட்டு இருந்தது.

(ஊ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அறவிட முடியாக் கடன்களை ஒதுக்குதல் தொடர்பில் குறிப்பிடும் போது ரூபா. 12,804,809 தொகை ஆகக் காணப்பட்ட கிடைக்கப்பெற வேண்டியவைகளில் இருந்து கழித்து தேறிய பெறுமதியினைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பன மேற்படி தொகையினால் கூடுதலாகக் காட்டப்பட்டு இருந்தன.

இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு (இ.க.த.நி.) ஒத்தியங்கும் வகையில் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டு உள்ளது. எனது முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் 2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறுதல் வேண்டும்

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கவில்லை.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிக்கும்போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக போதியளவில் பொருந்தாதுள்ளதா என்பதைக் கவனத்தில் கொள்ளுதலாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களை அடிப்படையாகக்கொண்டும், இந்த ஏனைய தகவல்கள் போதியளவில் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், அந்த விடயம் என்னால் அறிக்கையிடல் தேவையானதாகும். இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள்

போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவனத்தால் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையில் உள்ள எவரேனுமொரு உறுப்பினருடன் தொடர்புகொண்டு, ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 -2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட

ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது செயற்படுதல் தொடர்பாக,

சட்டங்கள் விதிகள் என்பவற்றின் தொடர்	இணங்காமை
(அ) 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் 10(05) பிரிவு	ஒதுக்கீட்டின் பின்னர் எஞ்சிய தேறிய வருமானம் திரட்டிய நிதியத்திடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டுமாயினும், நிறுவனம் அதற்கு இணங்கி செயற்படவில்லை.
(ஆ) 2017 ஆம் அண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் 2(1) மற்றும் 102 ஆவது பிரிவுகள்	நிறுவனம் வருமான வரி பொருட்டு பதவிவு செய்வதற்கு அல்லது வரியிலிருந்து விடுதலை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை
(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிஒழுங்குவிதி கோவை i. நிதி ஒழுங்குவிதி 763	பொருட்களை கையேற்றல், திருப்திகரமாக களஞ்சியப்படுத்தல், பொறுப்பினை பொருத்தமாக மேற்கொண்டு அப்புறப்படுத்தல் தொடர்பான திட்டங்களை பின்பற்றுதல் வேண்டுமாயினும், நிறுவனத்திற்கு சொந்தமான 06 களஞ்சியங்களின் பொருட்டு அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
	நிறுவனத்திற்கு உரித்தான 06 களஞ்சியசாலைகளுக்காக அதற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.
ii. நிதி ஒழுங்குவிதி 880	நிறுவனத்தில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு ஒத்தியங்கும் வகையில் பிணை வைத்து இருக்கவில்லை.
இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பெறுகைகள் கைநூலின் 2.6.3 9 (எ) ஆம் பிரிவு மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8 (அ), 6.2.1 (அ) (vi) மற்றும் 9.3 ஆம் வழிகாட்டல்கள்	2024 பெப்ரவரி 22 ஆம் திகதி ரூபா 2,000,000 தொகை பெறுமதியான நிகழ்ச்சித்திட்ட நிருவாக முறைமை ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்காக ஆலோசகர் ஒருவரைத் தெரிவு செய்யும் போது பெறுகைகள் கைநூலின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்குப் புறம்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.
அமைச்சரவைத் தீர்மானங்கள்	
2013 பெப்ரவரி 07 ஆம் திகதிய மற்றும் 13/0150/523/005 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்	நிறுவனம் தாபிக்கப்பட்ட சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்த போதிலும் அது மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

2013 ஏப்பிறல் 19 ஆம் திகதிய மற்றும் 13/0237/523/011 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம	1. நிறுவனம் தாபிக்கப்பட்ட சட்டத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு உட்பட்ட வகையில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் வகையில் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவி பணிப்பாளர் நாயகம் என்ற வகையிலும் மேலதிகப் பணிப்பாளர் பதவி மேலதிக பணிப்பாளர் நாயகம் என்ற வகையிலும் தரமுயர்த்தல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்த போதிலும் பணிப்பாளர் நாயகம் பதவி மற்றும் 06 மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிகள் என்பன சட்டத்திற்கு உரிய திருத்தங்களை மேற்கொள்ளாமல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன. 2. துறையில் சிரேஸ்டர்களும் நிரந்தர அடிப்படையிலோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ நிறுவனத்தின் பதவியணிக்கு இணைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் ஆட்சேர்ப்புக்கள் இரண்டாம் நிலை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. 3. நிறுவனத்தின் அடிப்படை நோக்கம் அரச உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல் ஆகும் என்பதுடன் அதற்காக சகல சேவைகளுக்கும் உரிய அரச உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதல் வேண்டும் எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. 4. நிறுவனத்தினால் நடாத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளின் உள்ளடக்கம், பயிற்றுவிக்கும் வழிமுறைகள் என்பவற்றை புலனாய்விற்கு உட்படுத்தி அவற்றை மீண்டும் தயாரித்தல் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும் எனினும் கிட்டத்தட்ட 11 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் உரிய அறிக்கை முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயல்படுதல் தொடர்பாக,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, பல்கலைக்கழகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது தொடர்பாக,

2.3 ஏனைய விடயங்கள்

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2008 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட உள்ளகச் சுற்றுநிருபத்திற்கு அமைய நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆலோசகர்களுக்கு, நிறுவனத்தினால் நடாத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளில் மாதம் ஒன்றிற்கு பயிற்சி விரிவுரை 45 மணித்தியாலங்களைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மாத்திரம் வெளிவாரியான உளவள ஆலோசனைகள் மற்றும் பரீட்சை நடவடிக்கைகளில் இருந்து மேலதிக கொடுப்பனவு ஒன்றினைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் காணப்பட்டது. இந்த வழிமுறையினை மாற்றி 2024 மார்ச் 28 ஆம் திகதி 340.07 ஆம் இலக்க நிருவாக சபையின் தீர்மானத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டு இருந்த புதிய வழிமுறைக்கு அமைய ஆலோசகர்களுக்கு பயிற்சி விரிவுரை 25 மணித்தியாலங்கள் மற்றும் பணம் அறிவிட்டுப் நடாத்தப்படும் ஏனைய பணிகளும் உட்பட மாதம் ஒன்றிற்கு 140 மணித்தியாலங்களைப் பூர்த்தி செய்வதன் மூலம் தமது செயலாற்றுகையினைப் பூர்த்தி செய்ய முடியும். சம்பளத்தின் நூற்றிற்கு 50 என்ற வகையிலான இந்த இரண்டாம் நிலைக் கொடுப்பனவுகளை வழங்கும் புதிய வழிமுறையில் மாதம் ஒன்றிற்கு தாபன ரீதியான விரிவுரை 25 மணித்தியாலயத்திலும் குறைவாக பூர்த்தி செய்திருந்த 14 ஆலோசகர்களுக்கு ரூபா. 4,071,511 தொகையும், தாபன ரீதியாக ஒரு விரிவுரை மணித்தியாலயத்தினையாவது பூர்த்தி செய்யாத 07 ஆலோசகர்களுக்காக ரூபா. 881,433 தொகையும் செலுத்தப்பட்டு இருந்தது. மேலும், இந்த ஆலோசகர்களுக்கு வெளிவாரியான விரிவுரைகள் மற்றும் ஏனைய கட்டனங்கள் என்பவற்றிற்காக ரூபா. 3,483,572 தொகை செலுத்தப்பட்டு இருந்தது.

(ஆ) நிறுவனத்திற்காக உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று தாபிக்கப்பட்டு காணப்பட்ட போதிலும் அதற்காக பதவியணி ஒன்றினை அனுமதித்துக் கொண்டு இருக்கவில்லை என்பதுடன் உள்ளகக் கண்காய்வாளரின் துணைப் பதவியணி என்ற வகையில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டு இருந்தார்.

(இ) 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 166 ஆகவும் மற்றும் உண்மையான பதவியணி 116 ஆகவும் காணப்பட்டது. அதில் சிரேஷ்ட மட்டத்தில் நிலவிய 47 பதவிகளுள் 21 வெற்றிடம் நிலவியதுடன் இணைத்துக் கொள்ளப்பட்டு இருந்த 26 பதவிகளுள் 20 பதவிகள் இரண்டாம் நிலை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு இருந்தது. இதற்கு மேலதிகமாக மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் 31 பேரும் இரண்டாம் நிலை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு இருந்தனர். இரண்டாம் நிலை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் இரண்டு வருடங்களில் நிறுவனத்தினை விட்டு வெளியேறிச் சென்றமையின் காரணமாக மீண்டும் மீண்டும் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ள வேண்டி இருந்தது. மீளாய்வு ஆண்டில் பணிப்பாளர் நாயகம் ஒருவரும், 07 ஆலோசகர்களும் உட்பட 15 உத்தியோகத்தர்கள் நிறுவனத்தில் இருந்து விலகிச் சென்றிருந்ததுடன் 06 ஆலோசகர்கள் உட்பட 18 உத்தியோகத்தர்கள் இரண்டாம்

நிலை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு இருந்தனர்.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் நிறுவனத்தில் தாபிக்கப்பட்டு இருந்த உடற் கட்டமைப்பு விருத்தி நிலையத்திற்காக ரூபா. 9,870,120 தொகை பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்ததுடன் மேற்படி உபகரணங்களைப் பேணி வருதல் மற்றும் சேவை செய்தல் என்பவற்றிற்காக ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு இருக்கவில்லை. நிலைத்திற்காக உடற் கட்டமைப்பு அபிவிருத்தி ஆலோசகர் ஒருவரின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், எந்தவித நோக்கம் ஒன்றும் இன்றி கொள்வனவு செய்யப்பட்டு இருந்த உபகரணங்கள் மழை நீர் கசியும் கட்டிடம் ஒன்றில் பயன்பாடற்ற வகையில் காணப்பட்டன.

(உ) செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்த நாடளாவிய சேவைகளின் விஷெட தரத்தில் உள்ள 360 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் 12 இல் 07 நடாத்தப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், இரண்டு நாடளாவிய சேவைகளின் 221 உத்தியோகத்தர்களின் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் 07 இன் பங்குபற்றல் தொடர்பான முன்னேற்றம் நூற்றிற்கு 8-17 இடையில் காணப்பட்டது. மேலும் 900 அரச உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 30 உம் 200 உத்தியோகத்தர்களுக்காக பணம் அறவிட்டு நடாத்தப்படும் 06 பாடநெறிகளும், 60 உத்தியோகத்தர்களுக்காக பணம் அறவிட்டு நடாத்தப்படும் சிங்களம் மற்றும் தமிழ் மொழி சான்றிதழ் பாடநெறிகள் 02 உம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. ஆண்டிற்குள் நடாத்தப்பட வேண்டிய 450 உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் 05 செயலமர்வுகளும் நடாத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) பட்டப் பின் பாடநெறிகளை விட்டுச் சென்ற 55 பேர்களிடம் இருந்து ரூபா.11,578,750 தொகைப் பாடநெறிக் கட்டணங்கள் 03-05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதலும், மொழிப் பாடநெறிகளை விட்டுச் சென்ற 46 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா.1,091,027 தொகைப் பாடநெறிக் கட்டணங்கள் 01-05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதலும், அறவிடப்பட வேண்டிய மீதிகள் தீர்த்து வைக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(எ) 06 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் நிலவி வரும் ரூப. 1,752,771 தொகை பல்வேறு வகையில் கிடைக்கப்பெற வேண்டிய 11 மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஏ) பயிற்சிப் படநெறிகள் மற்றும் பரீட்சைகள் என்பவற்றினை நடாத்துவதற்காக பல்வேறு அரச நிறுவனங்களில் இருந்து கிடைக்கப் பெற்றிருந்த 03-05 வருட காலம் முதல் நிலவி வரும் ரூபா. 3,289,670 தொகை அகிய மீதிகள் தீர்த்து வைக்கப்படாமல் செலுத்தப்பட வேண்டிய மீதிகளாக எடுத்துக் காட்டப்பட்டு இருந்தன.

(ஐ) நிறுவனத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு அமைய பட்டப்பின் கற்கைக் கல்லூரிக்காக ஆரம்ப மதிப்பீட்டிற்கு அமைய எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூ. 23,730,000 தொகை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செலவு ரூபா.23,660,000 தொகை ஆகக் காணப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு அமைய மேற்படி எதிர்வுகூறல்கள் முறையே ஷரூ. 3,500,000 தொகை மற்றும் ரூபா 2,970,000 தொகை என்ற வகையில் நூற்றிற்கு 85 இனால் குறைக்கப்பட்டு இருந்தது. மேற்படி திருத்தம் செய்யப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் ரூபா. 1,959,690 தகை அதாவது நூற்றிற்கு 56 மாத்திரம் ஈட்டிக்

கொள்ளப்பட்டு இருந்ததுடன் திருத்தம் செய்யப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செலவு ரூபா. 3,701,477 தொகையினால் மிகைத்து ரூபா 6,671,477 தொகை அதாவது நூற்றிற்கு 225 தொகை செலவிடப்பட்டு இருந்தது. இதற்கு அமைய, உரிய வரவு செலவு எதிர்வுகூறல்கள் மற்றும் உண்மையான பெறுமதி என்பவற்றிற்கு இடையில் பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் பட்டப் பின் கற்கைக் கல்லூரியின் செயற்பாட்டின் ஊடாக ஆண்டிற்குள் நட்டம் ஏற்பட்டு இருந்தது.

ஜீ.எச்.டீ. தர்மபால
கணக்காய்வாளர் நாயகம் (ப.க.)